உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 30 | விரோதிகிருது - புரட்டாசி – 10–10–71 | இதழ் 11

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

## அன்னையர் இன்னருள்

தனக்கென ஒன்றையும் வேண்டாத இறைவன் செய்யும் செயல்கள் பலவும் உயிர்களின் பொருட்டேயாம். உயிர்கள் எண்ணிக்கையால் பலவாதலே யன்றித் தரத்தினலும் பல்வேறு வகையினவாம். அதனல், அவை அனைத்திற்கும் இறைவன் ஒரே வகையான நிலையில் நின்று அருள்புரிதல் இயலாது. ஆகவே, அவன் அவைகட்கு அருள்புரியும் வகையை, 'இவ்வளவு தான்' என்று வரையறுத்தல் இயலாது. இதனைத் திருஞானசம்பந்தர்,

" நானவித உருவாய் நமை ஆள்வான் "

என்றும்,

" ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான்புகின் அளவில்லை; கிளக்க வேண்டா "

என்றும் அருளிச்செய்தார். இதனல், உயிர்களின் பொருட்டாக இறைவன் ஆணுகியும், பெண்ணுகியும், இளையவனுகியும், முதியவனுகியும், அச்சுறுத்துவோனுகியும், அருள்பொழிவோனுகியும் மற்றும் இன்னேரன்ன பல உருவினனுகியும் நிற்கின்றான்.

' சிறுவன் போலுறும்; குரவனே போலுறும் ; திணையிற்
குறியன் போலுறும்; நெடியவ னுகியும் குறுகும்;
நெறியின் இன்னனம் வேறுபல் லுருக்கொடு நிலவும்;
அறிவர் நாடருங் கந்தவே ளாடல் ஆரறிவார் "

என்கின்றது கந்த புராணம்.

இவ்வாறு இறைவன் பல்வேறு வகையான வடிவங்களில் தோன்றும்பொழுது அவற்றல் நலம்பெறுகின்ற உயிர்கள் அவனை அவ்வவ் வடிவம் உடையவனுகவே கருதி வாழ்த்தலும், வணங்கலும் செய்கின்றன. இதனைத் தாயுமானவர்,

" அன்னே அனேஎனும் சிலசமயம்; நின்னையே
ஐயா ஐயா என்னவே
அலறிடும் சிலசமயம் "

என்கின்றார். ஆணுகவும், பெண்ணுகவும் தோன்றி அருள் புரிவது ஒரு பெரும்பொருளே என்றலும், ஆணுகத் தோன்றுவதை 'சிவம்' எனவும், பெண்ணுகத் தோன்றுவதை 'சத்தி' எனவும் கூறுதல் மரபு. சிவத்திற்கும், சத்திக்கும் உள்ள வேறுபாடு, பொருட்கும், அதன் பண்புக்குமுள்ள வேறுபாடு போன்றதுதான். அஃதாவது, சிவம், நீர் மலர், இசை, மணி போல்வது என்றல் சத்தி அவற்றில் உள்ள தண்மை, சுவை, மணம், இனிமை, ஒளி போன்றதாகும். அவ்வளவே வேற்றுமை. நீர் முதலியவற்றில் நமக்குப் பயன்படுவன தண்மை முதலியனவே யாதல்போலச் சிவத்தின்பால் நின்று நமக்குப் பயன் தருவது சத்தியே. இல்லங்களில் சிறுமகார்க்குத் தந்தையால் உண்டாகும் நலங்கள் பலவும் தாய் வழியாகவே கிடைத்தல்போல, சிவத்தால் உயிர்கட்கு உண்டாகும் நலங்கள் பலவும்சத்தி வழியாகவே கிடைப்பனவாம். ஆகவே, உலகம் எல்லாவற்றிற்கும் அத்தனும் அன்னையுமாய் நின்று நலம் புரிந்துவரும் சிவம் சத்திகளுள் அன்னையாகிய சத்தியே

பலவகையில் நின்று வேண்டுவார் வேண்டுவன பலவற்றை யும் தந்து அருள்புரிகின்ருள். அதுபற்றியே மக்கட்கு இன்றி யமையாது வேண்டப்படும் செல்வம், கல்வி வெற்றி என்பன· திருமகள், கலைமகள், மலைமகள் என்னும் அன்னையர் தரும் இன்னருள் என ஆன்ருேர் கூறினர். மற்றை அன்னையர் பலரால் மற்றும் பல நலன்களை மக்கள் பெற்று வருகின்ருரா யினும், செல்வம் முதலிய மூன்றனது சிறப்புக் கருதித் திரு மகள் முதலிய மூவர் அன்னையரையே சிறப்பாகக் குறிப்பிடுவர். இவ்விடத்தில் 'மலைமகள்' என்பது அவள் எருமைத் தலை அசுரனை அழித்துத் தேவரது இடுக்கண் தீர்த்தருளிய கொற்றவை நிலையையேயாம்.

இவ் அன்னையர்தம் இன்னருளைப் பெறுதற்கு எல்லா நாட்களும், எல்லாப் பொழுதுகளும் உரியனவாயினும், புரட்டாசித் திங்களில் வளர்பிறைத் தொடக்க நாள் முதல் ஒன்பது நாட்கள் - அவற்றிலும் முன்னிரவு நேரம் சிறப்பாக உரிய நாளும், பொழுதுமாகும். அதனுல் அந்நாட்களை 'நவ ராத்திரி தினங்கள்' என்று வழங்குவர். வசந்த நவராத்திரி, நூல்களில் சொல்லப் படினும் அவை நடைமுறையில் இல்லை· மேற்குறித்த ஒன்பது நாட்களில் முதல், இடை, இறுதி என்னும் மும்மூன்று நாட்கள் முறையே மலைமகள், திருமகள் கலைமகள் என்னும் மூவர்க்கும் உரியனவாம். அந்நாட்களில் நாடெங்கும் இல்லங்களிலும், திருக்கோயில்களிலும் அம்மை யைப் பல்வேறு வடிவங்களில் அலங்கரித்துத் தேவர், முனிவர், மக்கள், மற்றும் சாரசரங்களாகிய அனைத்துயிர்க் கூட்டங் களும் புடைசூழக் கொலு நிறுத்தி ஆடல், பாடல், வாத்திய முழக்கம் முதலிய பலவகைச் சிறப்புக்களுடன் மக்கள் பெரு விழா நிகழ்த்தி மகிழ்வர்.

இச் சிறப்பு நாட்கள் அண்மையில் வந்தபொழுது தருமை யாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப் பாங்கின் வண்ணம் ஆதீனக் கோயில் களில் விழாக்களும், சமயச் சொற்பொழிவுகளும் முறையாக நடைபெற்றதோடு, ஆதீனத் தலைமை இடமாகிய தருமையில் திருக்கோயில் கொண்டிருக்கும் அஷ்டாதச புஜ ஸ்ரீ மகா லட்சுமி துர்க்கா தேவியின் திருமுன்பில் ஒன்பது நாட்களிலும்

வேத சிவாகம திருமுறைப் பாராயணங்களுடன் சதசண்டி யக்ஞும், கோடியர்ச்சனை, அலங்கார தீபாராதனை முதலிய சிறப்பு வழிபாடுகள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உடனிருந்து நிகழ்த்துவிக்க, அன்பர் பலர் ஆங்காங்கு நின்றும் வந்து கண்டு வணங்கிக் களித்து ஸ்ரீ துர்க்காதேவி யோடு திருமகள், கலைமகள் என்னும் அன்னையர்தம் இன் னருளைப் பெற்று மகிழ்ந்தமை என்றும், யாவரும் மறக்கற் பாலதன்று. திருமகள், கலைமகள் முதலாக அன்னையர்தாம் பலர்போலத் தோன்றினும், அவர் அனைவரும் மலைமகளாகிய அம்பிகை ஒருத்திதன் ஒவ்வொரு கூற்றினரேயன்றி வேறல்லர் என்பதை அம்பிகையின் அருள்பெற்ற பெரியா ராகிய அபிராமி பட்டர் தமது அபிராமி அந்தாதியில் அருளிச் செய்யும் பாடலை இங்கு நினைவு கூர்தலும் இன்றியமையாததே.

தனந்தரும், கல்விதரும், ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும், தெய்வ வடிவும் தரும், நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும், நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலால் அபிராமி கடைக்கண்களே.

இதில், 'அபிராமி கடைக்கண்களே செல்வம், கல்வி எல்லாவற்றையும் தரும்' என்று அவர் கூறியிருத்தல் உளங் கொளத் தக்கது. இன்னும் அவர் 'கொற்றவையாய் நின்று வெற்றியைத் தருபவளும் அபிராமியே' என்று குறிப்பிடுவதும் இங்குச் சிறப்பாக நோக்கத்தக்கதாம்.

சுந்தரி, எந்தை துணைவி, என் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினள், மயிடன் தலைமேல்
அந்தரி, நீலி, அழியாத கன்னிகை, ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.

இவற்றை எல்லாம் நோக்கி, அன்னையர் பலரையும் ஒருவராகவோ, பலராகவோ அவரவருக்கு ஏற்ற முறையில் கருதி வழிபட்டு அவர்தம் இன்னருளுக்கு உரியராதல் மக்கட்குக் கடனாகும்.

# குருவருள்

## இறை நிலை

உயிர்கள் உலகத்தில் தோன்றி வளர்ந்து பயன் அடைதற் பொருட்டு 'அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம்' என்னும் நால்வகைத் தோற்றத்தில், 'வானவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்' என்னும் எழுவகைப் பிறப்பு வகைகளையும், அவற்றுள்ளும் பல்வேறு வகைப்பட்ட எண்பத்து நான்கு நூறுயிர யோனி பேதங்களையும் அமைத்துள்ள இறைவன், பக்குவம் பெற்ற உயிர்கள் மெய்யுணர்வு பெற்றுத் தன்னை அடைந்து இன்புறுதற் பொருட்டுப் பல உபதேச பரம் பரைகளையும் உலகில் நிலவச் செய்கின்றான். அவைகளில் 'சயிலாதி மரபு' என்னும் நந்தி பரம்பரை ஒன்று. அஃது எட்டுக் கிளைகளாய்ப் பிரிந்து நிலவுலகத்தில் ஞானத்தை வளர்த் தன என்பதைத் திருமூலரது திருமந்திரத்தால் அறிகின்றோம். அவ் எட்டுக் கிளைகளுள் சனற்குமார பரம்பரையே இன்று மெய் கண்ட சந்தானங்களாய் விளங்குகின்றது என்பதைச் சிவஞான சித்தி, சிவப்பிரகாசம் முதலிய சித்தாந்த நூல்கள் வெளியிடு கின்றன. நந்தி பரம்பரையில் உலகம் உய்யத் தோன்றிய அருள் வெளிப்பாடாய நூல்களுள் காலத்தால் மிகமுற்பட்டது திருமூலர் அருளிச்செய்த திருமந்திரமே. அதில் திருமூலர் தம்மை இறைவன் படைத்தது தனது பெருமைகள் பலவற்றையும் தமிழ் மொழியால் இனிது விளங்கப் பாடுதற்கு என்றே அருளிச்செய் கின்றார்.

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது,
முன்னைநன் றாக முயல்தவம் செய்திலர்!
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்ச்செய்யு மாறே.

இறைவன் திருவருள் தமக்கு அளித்த அளவிலாப் பேரின் பத்தைப் பலரும் பெற்று மகிழ்தற் பொருட்டே திருமூலர் தமது தமிழ் ஆகமத்தைச் செய்தமையை,

"நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்"

என்பதனுல் விளக்கினுர். அவர் பெற்ற இன்பத்தை நாமும் பெறுதற்கு இறைவனது பெருமையை முதற்கண் கேள்வி யளவி லாவது கேட்டுணர்தல் வேண்டும் என்னும் கருத்தால் முதலிலே இறை நிலையை அவர் பலவாறு வலியுறுத்தி விளக்கினுர்.

உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களுள் ஒவ்வொன்றையே செய்து 'மும்மூர்த்திகள்' எனப் பெயர்பெற்ற மூவர்க்கும் மேலாய் நிற்பவன் இறைவன். மும்மூர்த்திகளில் தொழில் பற்றித் தகுதி வேறுபாடுகள் இருப் பினும் 'அதிகார மூர்த்திகள்' என்னும் வகையில் அம் மூவரும் ஒரு நிகரானவரே. அதனுல், முத்தொழிற்கும் முதல்வனுய் அவற்றுள் ஒவ்வொன்றை ஒவ்வொருவரைக் கொண்டு செய்விக் கின்ற இறைவன் தன்னிகரில்லாத் தலைவனுவான்.

முன்னை ஒப்பாயுள்ள மூவர்க்கு மூத்தவன் ;
தன்னைஒப் பாய்ஒன்றும் இல்லாத் தலைமகன்.

இவ்வாருதலின், இறைவன் எல்லாராலும் தான் வணங்கப் படுதலன்றித் தன்னுல் வணங்கப்படுவார் ஒருவரையும் இலன்.

என்னுல் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னுல் தொழப்படு வாரில்லை தானே.

'இறைவன் ஒருவனேயாயினும், அவன் அனைத்துப் பொருளுமாய் நிறைந்து நிற்கின்ருன்' என்பதை,

"தானே இருநிலம் தாங்கிவிண் ணுய்நிற்கும் ;
தானே சுடும்அங்கி ஞாயிறும் திங்களும்"

என்பது முதலியவற்ருல் வெளியிட்டார். தாயினும் நல்லனுய்ப் புனலினும் (நீரிலும்) தண்ணியனுய் நிற்கின்ற இறைவன் அதே சமையத்தில், தவறிழைப்பார்க்குத் தீயினும் வெய்யனுய் (கடுமை யானவனுய்) இருக்கின்ருன் என்கின்ருர்.

இறைவன் பிறப்பு இறப்பு இல்லாதவன் ; அதுவேயன்றித் தன்னை அடைந்தவர்க்கும் பிறப்பும் இறப்பும் ஆகிய அப் பெருந் துன்பத்தைப் போக்கிப் பேரின்ப வீட்டில் இருத்தும் பேரரு ளாளன். தன்னைச் சார்ந்தவரை என்றும் கைவிடாதவன் ; அதனுல் அவனை வணங்கியே தேவர் பலரும் தம் தம் பதவியைப் பெற்றனர். குபேரன் பெருநிதிக் கிழவனுனதும் அவனை வணங் கியே. அசுரர்களும் அவனை வணங்கி அழிவிலா வரமும். உலகை ஆளும் ஆட்சியும் பெற்றனர். மக்களுள்ளும் பலர் அவனை

வணங்கிப் பல நன்மைகளை அடைந்துள்ளனர். அவனது அருளைப் பெறுதற்கு அன்பு ஒன்றே வேண்டுவது. அவ்வன்பினால் மனம் உருகி அவனை வாழ்த்துகின்றவர்கட்கு அவன், அவர்கள் விரும்பும் வடிவில் எதிர்ப்பட்டு நின்று அருளுவான். இவ்வாறு அருமையில் எளிய ஆற்றலுடைய அருளாளனும் ஒருவன் உண்டோ என்று ஒருவரும் ஐயுற வேண்டுவதில்லை. ஆழாழி கரையின்றி நிற்றல் முதலிய உலகத்தின் நிலைகளை உற்று நோக்கின், அவனது வியத்தகு நிலையை உணரலாகும். ஆகவே, உலகம் எல்லாவற்றிற்கும் அப்பனாய், உண்ண உண்ணத் தெவிட்டாத அமுதமாய், வேண்டுவார் வேண்டுவதை ஈயும் ஒப்பற்ற வள்ளலாய், ஊழிகள் பல மாறி மாறிச் செல்லவும் தான் மாற்றம் இன்றி என்றும் ஒரு பெற்றியனாய் உள்ள இறைவனை உங்களால் இயன்ற அளவு எவ்வகையிலேனும் துதியுங்கள்; துதித்தால், அவனது அருளைப்பெறுதல் திண்ணம் என்றுதிருமூலர் அறிவுறுத்தியருள்கின்ற அவ் அரிய உபதேசத்தினை உணர்ந்து அவனது அருளைப் பெறுதற்கு மக்கள் இவ் ஒரு திருமந்திரத்தையேனும் மனங்கொண்டு போற்றுவார்களாக:-

அப்பனை, நந்தியை, ஆரா அமுதினை,
ஒப்பிலி வள்ளலை, ஊழி முதல்வனை,
எப்பரி சாயினும் ஏத்துமின்; ஏத்தினால்,
அப்பரி சீசன் அருள்பெற லாமே.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi

"I have led a batch of about 60 devotees and paid our homage and devotion to the presiding deities. The temple is a historic one and is well kept."

(Sd.) R. Chandran,
Advocate, Srivilliputhur.

27—9—1971

# திருவருட்பயன் விளக்க உரை

(மலர் 30, இதழ் 10, பக்கம் 560-இன் தொடர்ச்சி)

**நான்காவது குறள்,**

> "பாலாழி மீனுளும் பான்மைத் தருளுயிர்கள்
> மாலாழி யாளு மறித்து"

எனவரும்.

இதன் பொருள் :- அருள் உயிர்கள் ; திருவருளாகிய கருப்பஞ் சாற்றுக் கடலிலே உள்ள உயிர்கள் ; மறித்து மால் ஆழி ஆளும் அதனை நுகர அறியாது மீள மீள மாயையாகிய மதுக்கடலையே நுகரும்; (இது) மீன் பால் ஆழி ஆளும் பான்மைத்து - பாற்கடலிலே உள்ள மீன்கள் அப் பாலை நுகர அறியாது அதில் உள்ள சிற்றுயிர்களை நுகரும் தன்மையை ஒப்பது.

விளக்க உரை :- அஃதாவது, 'அறியாமைப்பாலது' என்பதாம். "மால்" என்பது மயக்கத்தைத் தரும் மதுவைக் குறித்தலுடன், மாயையின் மேலும் நோக்குடைத்தாய் நின்றது. அவ்வாற்றான் மாயையை, 'மதுக்கடல்' எனக் கூறவே, 'திருவருள் கருப்பஞ்சாற்றுக்கடல்' என்பதும் தானே பெறப்பட்டது. இங்குக் குறிக்கப்பட்ட அறியாமையாவது, உயர்ந்ததனை இழிந்ததெனவும், இழிந்ததனை உயர்ந்ததெனவும் உணரும் திரிபுணர்வு. இதனை, 'விபரீத ஞானம்' என்பர்.

'உடம்பைப் பெறுதபொழுது உயிர் ஒன்றையும் அறியாதாயினும், உடம்பைப் பெற்றபின் எல்லாவற்றையும் அறிந்து அனுபவிக்கின்ற உயிர், வினையைப் பெருக்க நுகரப் பேரொளியாய் எங்கும் அருக்கன் என நிற்கும் திருவருளை* அறிந்து அனுபவியாமை என்னை' என்னும் ஐயத்தினை உட்கொண்டு 'உடம்பைப் பெற்றபின்னும் உயிர்கட்கு மயக்க உணர்வே உள தாதலின், அது கூடாதாயிற்று' எனக் கூறியவாறு. "ஊமன்கண் போல "* என்னும் குறட்கு, உயிர்களின் அறியாமை யாகிய சிறுமை கூறுதல் கருத்தெனவும், இதற்கு அவற்றது மயக்க

---

* இந்நூல் 19.

உணர்வாகிய சிறுமை கூறும் முகத்தால் திருவருளின் பெருமை கூறுதல் கருத்தெனவும் தெரிந்துணர்ந்துகொள்க.

இதனுல், திருவருள், உலகம்போல மாசுடையதும், சிற்றின் பத்ததுமாகாது, தூயதும், எல்லேயில் இன்பத்ததுமாதல் கூறப்பட்டது.

**ஐந்தாவது குறள் :**

" அணுகு துணேயறியா ஆற்றேனில் ஐந்தில்
உணர்வை யுணரா உயிர் "

எனவரும்.

இதன் பொருள் :- அணுகு துணே அறியா ஆற்றேனில் - தனக்குக் காவலாகத் தன் பின்னே வருகின்ற துணேவனேத் திரும்பிப் பாராது அச்சத்தால் நடுக்கமுற்றுச் செல்லும் வழிப் போக்கன் போலவும்; ஐந்தில் - தம்மை உள்நின்று செலுத்தும் உயிரை உணரமாட்டாத ஐம்பொறிகளேப் போலவும் - உயிர் உணர்வை உணரா - உயிர்கள் பேரறிவே வடிவான திருவருளே உணராது துன்பமுறும்.

விளக்க உரை :- திருவருளே உணர்ந்தவழித் துன்பம் இலதாதலே உணர்த்துதற்கு, எதிர்மறை வகையால் அணுகு துணே அறியா ஆற்றேனே உவமை கூறியவழி, 'அணுகு துணேவன் ஆற்றேனின் வேருகலின், ஆற்றேன் அத்துணேவனே அறியாஞவன்; திருவருள் அவ்வாறின்றி எங்கும் எவையும் எரியுறு நீர்போல் ஏகமாய்த் தங்கி நிற்றலின், $ அதனே உயிர்கள் அறியா என்றல் பொருந்துமாறு என்னே என்னும் ஐயத்தை அகற்றுதற்கு ஐம்பொறிகளே உவமை கூறினர். உயிர் உணர்வுடையதாயினும், புறவுணர்வை மட்டுமே உடையதாய் அகவுணர்வை இழந்து நிற்றற்கண் ஐம்பொறிகளோடு ஒக்கும் என்பதாம்.

" விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா ஆங்கவை போலத்
தாம்தம் உணர்வின் தமியருள் " *

என்ருர் மெய்கண்டதேவர்.

---

$ இந்நூல் - 8. * சிவஞானபோதம் சூத்திரம் - 5.

இதனல், திருவருள், உயிர்கட்குத் தோன்ருத் துணையாய் நின்று உதவுதல் கூறப்பட்டது.

ஆருவது குறள் :

" தரையை யுணராது தாமே திரிவார்;
புரையை உணரா புவி,"

எனவரும்.

இதன் பொருள் :- தரையை உணராது தாமே திரிவார் - (நிலத்தின்கண் வாழ்வோர் அதன்கண் வாழ்ந்தும்) தம்மைத் தாங்கி நிற்பது நிலம் என்பதனை நினையாமல் தாமே வாழ்க்கையில் திளைத்து நிற்பர்; (அதுபோல) புவி புரையை உணரா - உயிர்கள் திருவருளால் எல்லாவற்றையும் பெற்று நின்றும், அவற்றைத் தருவது திருவருள் என்பதனை உணராது பெற்றவற்றிலே அழுந்திநிற்கும்.

விளக்க உரை :- இஃது எடுத்துக்காட்டுவமை. இங்கு 'எல்லாம்' என்பது. உலகியல் பற்றி வருவனவற்றையே; என்னை? மெய்ந்நெறி பற்றி வருவனவற்றை அறியும் உயிர் திருவருளை மறத்தல் இல்லையாகலின். புரை, கரப்பிடம். அஃது ஆகுபெயரால் அவ்விடத்து உள்ள பொருளைக் குறித்தது. கரப்பிடம் இங்குப் பாசத் திரைக்கு அப்பாலுள்ள இடம். இனி, புரை உயர்வுமாம். 'புரைய' என்பது பாடமாயின், 'திருவருளை' என்பது அதிகாரத்தால் வருவித்துரைக்க. "புவி" என்றது உலகம்என்னும் பொருட்டாய்க் கட்டுற்று நிற்கும் உயிர்களைக் குறித்தது.

இதனல், திருவருள் உயிர்களை எஞ்ஞான்றும் தாங்குவதாதல் கூறப்பட்டது.

ஏழாவது குறள்,

" மலைகெடுத்தோர் மண்கெடுத்தோர் வான்கெடுத்தோர் ஞானந்
தலைகெடுத்தோர் தற்கேடர் தாம் "

எனவரும்,

இதன் பொருள் :- ஞானம் தலைகெடுத்தோர் - திருவருள் உணர்வை இழந்தவர்; மலை கெடுத்தோர் மண் கெடுத்தோர் வான் கெடுத்தோர் - தமக்கு அரணய் உள்ள மலையை இழந்தவரோடும்,

விளைவைத்தரும் நிலத்தை இழந்தவரோடும், மறுமையில் அடையும் நற்கதியை இழந்தவரோடும் ஒப்பர்; (ஆகவே,) தாம் தற்கேடர் - அவர் தாமே தமக்குக் கேடு செய்துகொள்பவராவார்.

விளக்க உரை :- 'கெடுத்தோர்' மூன்றும் உவமை ஆகுபெயர். அம்மூன்றனுலும் முறையே, திருவருளை உணராமையால் வினைத்துன்பம் வந்துபற்றுதலும், மெய்யுணர்வு பிறவாமையும், வீடு பெறுதல் கூடாமையும் குறிப்பால் உணர்த்தப்பட்டன. "ஞானம்" என்றது திருவருள் உணர்வை என்பது ஏற்புழிக் கோடலால் விளங்கிற்று. "தலைகெடுத்தோர்" என்பது ஒருசொல் தன்மைத்து. "தற் கேடர்" என்பது பெயரளவாய் நிற்றலின் பால்வழு வாகாதாயிற்று.

இதனுல், திருவருளை மறத்தலின் குற்றம் தொகுத்துணர்த்தப் பட்டது.

(தொடரும்)

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Sri Amirthakateswaraswamy Devasthanam, Tirucadayur.

I worshipped the Almighty with my family and had darsan. I am very happy to note the atmosphere prevailing in the temple, and the cleanlines with which they keep the temple. The authorities are very kind and cordial, and explained the sthalapuranam with which this temple is associated. I am very much moved with the devotional songs sung on the occasion.

(Sd.) R. Venugopal.

12—9—71. Superintending Engineer, Thanjavur

# நவராத்திரி

வேதாந்த சிரோமணி,

**பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்**

ஒவ்வொரு மாதமும் அமாவாசை கழிந்து சுக்ல பிரதமை முதல் நவமி வரையில் உள்ள ஒன்பது நாட்களும் நவராத்ரி எனப்படும். உத்தராயணத்தில் சைத்ர சுத்த பிரதமை முதற் கொண்டு ஒன்பது நாட்கள் வஸந்த ருதுவில் இருப்பதால் வாஸந்திக நவராத்திரி எனவும் புரட்டாசி மாதத்தில் ஆச்வயுஜ சுத்தப் பிரதமை முதற்கொண்டு ஒன்பது நாட்கள் சரத்ருதுவில் இருப்பதால் சாரதா நவராத்ரி எனவும் சொல்லப்படும். வஸந்த ருதுவும் சரத்ருதுவும் மக்களுக்குப் பலவித நன்மைகளை அடைய இடையூருக நோய் முதலியவற்றை உண்டுபண்ணுமாதலின் அக்காலத்தில் பராசக்தியைப் பூசிக்கவேண்டும். இந்த இரண்டு ருதுக்களும் யமனுடைய கோரப்பல் போன்றன என்று தேவீ பாகவதம் கூறுகிறது. தேவீ மாகாத்மியத்திலும் "சரத்காலே மஹாபூஜா க்ரியதே யா ச வார்ஷிகீ" என்ற மந்திரத்தின் உரையில் சரத்காலத்திலும் வருஷ ஆரம்பத்திலுள்ள வஸந்த காலத்திலும் தேவீ மாகாத்மியத்தைப் படித்துக் கேட்டவர்கள் ஸகலவித நன்மைகளையும் அடைவர் என்று கூறப்படுகிறது. வஸந்தருதுவில் ஸ்ரீராமநவமியை ஈருவும், சரத்காலத்தில் ஆயுத பூசையை ஈருகவும் வைத்துப் பூசைகள் சிறப்பாகச் செய்யப்படு கின்றன. சாரதா நவராத்திரியில் முதல் மூன்று நாட்களில் கொற்றவையையும், நடு மூன்று நாட்களில் லக்ஷ்மியையும் கடைசி மூன்று நாட்களில் கலைமகளையும் வழிபடுவது வழக்கமாக உள்ளது. திதிகளின் வளர்ச்சி, குறைவு இவற்றின் காரணமாக சிலசமயம் நவராத்திரி விழா பத்து நாட்களும் சிலசமயம் எட்டு நாட்களும் கொண்டாடப்படுவதும் உண்டு. மைசூர் முதலியவிடங்களில் தசராப் (தசராத்திரி – பத்து இரவு) பண்டிகை கொண்டாடப்படுவது விஜயதசமி தினத்தைச் சேர்த்து ஆகும். வங்காள தேசத்திலும் வழிபட்ட அம்பிகையின் திரு வுருவத்தைக் கங்கையில் சேர்க்கும் பத்தாவது தினத்தையும் சேர்த்து தசரா கொண்டாடுகிருர்கள். தென்னுட்டில் ஒன்பது நாட்களிலும் பூசை செய்ய முடியாதவர் "மூலேன வாஹயேத் தேவீம் ச்வரணேன விஸர்ஜயேத்" என்ற (மூலநக்ஷத்திரம்

கூடிய நாளில் ஆவாஹனம் செய்து திருவோண நக்ஷத்திரம் கூடிய நாளில் விஸர்ஜனம் செய்யவேண்டும்.) பொதுவிதியை அநுசரித்து கடைசி மூன்று நாட்களில் மட்டும் இந்த விரதத்தை வீடுகளில் செய்கின்றனர். எழு நூறு மந்திரங்களடங்கிய ஸப்தசதி என்ற தேவீ மாகாத்மியத்தில் தேவியின் மூன்று சரித்திரங்கள் உள்ளன. அவற்றிற்கு முறையே மகாகாளி, மகாலக்ஷ்மி, மகா சரஸ்வதி மூவரும் தேவதைகள். அந்த தேவிகளுக்குரிய உருவம், தியானப், பொருள் வருமாறு:-

## தியானப்பொருள்

### மஹாகாளி :

மதுகைடபன் என்ற அசுரர்களைக் கொல்ல பிரமதேவனுல் துதிக்கப்பட்டவள். பத்து முகம், பத்துக்கால் பத்துக்கை இவற்றையுடையவள். இந்திர நீலக்கல்போன்ற காந்தியுடைய வள் பத்துத் தலைகளிலும் அகன்ற முப்பது கண்களையுடையவள். கைகளில் கத்தி பாணம் கதை சூலம் சக்ரம் சங்கம் புசுண்டீ, பரிகம் வில், இரத்தம் சொட்டும் தலை இவற்றைத் தரித்தவள். இம் மஹாகாளியை சேவிக்கின்றேன்.

### மஹாலக்ஷ்மி :

ஸகலதேவர்களின் சக்தி யாவும் ஒன்று திரண்டு தோன்றிய வள். வெளுத்தமுகம், கருத்தகை முழங்கால் தொடை, சிவந்த இடையும் பாதமும் மிக வெளுத்த கொங்கை மண்டலம் பலவித மாலை ஆடை ஆபரணம் பூச்சு இவற்றையுடையவள்; தாமரையி லிருப்பவள். ஜபமாலை, தாமரை, பாணம்; கத்தி வஜ்ரம், கதை, சக்ரம், த்ரிசூலம், கோடரி, சங்கு, மணி, பாசம், சக்தி தண்டம், கேடயம், வில், பருகும் பாத்திரம், கமண்டுலு இவற்றைக் கையி லுடையவள். இந்த மஹிஷமர்த்தினிதேவியை சேவிக்கின்றேன்.

### மஹாசரஸ்வதி :

கௌரி தேவியின் சரீரத்தினின்றும் தோன்றியவள். ஸத்வ குணம் மிக்கவள். சும்பன் முதலிய அரக்கரைக் கொன்றவள். சரத் காலத்துச் சந்திரனை ஒத்த காந்தியுடையவள். மூவுலகிற் கும் ஆதாரமாக இருப்பவள். பாணம் உலக்கை சூலம் சக்ரம் சங்கு மணி கலப்பை வில் இவற்றை எட்டுக் கைகளிலும் ஏந்திய வள். இந்த சரஸ்வதி தேவியை சேவிக்கிறேன்.

# தித்திக்கும் தீபாவளி

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி

கங்கை நதியினில் ஆடிடுவோம் - உளம்
பொங்கும் மகிழ்வினில் பாடிடுவோம்!
எங்கும் சுடரொளி ஏற்றிடுவோம் - நலந்
தங்குந் திருநாளைப் போற்றிடுவோம்!

புத்தாடை கட்டி மகிழ்ந்திடுவோம் - உயர்
அத்தன் திருவடி சூழ்ந்திடுவோம்!
சத்தமி கும்வெடி போட்டிடுவோம் - உளம்
பத்திசி றந்திட வாழ்ந்திடுவோம்!

தித்திப்பு உண்டு திளைத்திடுவோம் - உயர்
மத்தாப் பொளியில் மலர்ந்திடுவோம்!
இத்தரை வாழ்ந்திட எண்ணிடுவோம் - வானம்
என்றும் பொழிந்திட வேண்டிடுவோம்!

உள்ள அழுக்குகள் மாய்த்திடுவோம் - மன
ஊனங்கள் யாவும் உடைத்திடுவோம்!
தெள்ளு தமிழ்மொழி உள்ளிடுவோம் - உயர்
தெய்வத் துணை கொண்டு உய்ந்திடுவோம்!

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

"Today I realised one of my longstanding ambitions to worship at the temple sanctified by the living presence of திருஞானசம்பந்தர். It was also a great pleasure to see such a well maintained and spotlessly clean temple"

(d) S. Narayanan,

12—9—71. Member, Income-Tax Appellate Tribunal
Cochin Bench.

'தருமை ஆதீனத்தினுல் பராமரிக்கப்பட்டு வரும் இச் சீர்காழித் தலத்திலுள்ள கோயில் மிக நல்ல முறையில் வைக்கப்பட்டுள்ளது. வரும் யாத்ரீகர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுப்பதில் கோயில் மேற்பார்வையாளரும் மற்ருேரும் மனமுவந்து ஈடுபடுவதன் காரணமாக இத் தலத்தில் இறை வழிபாட்டிற்கு வருவோர் மிகச் சுலபமாகத் தம் வழிபாடுகளைச் செய்யமுடிகிறது. அவர்களுக்கு எங்கள் பாராட்டுக்கள்."

(Sd) P. Kothandaraman,

20—9—7.. Sd P. A. to Speaker,
Madras - 9.

சென்னை, தியாகராயநகர் இந்து தர்ம மன்றத்தின் சார்பில், காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் ஆக்ஞைப்படி க்ஷேத்ராடனம் செய்து வருகிருேம். இன்றைய தினம் சீர்காழி சட்டைநாதசுவாமி கோவிலின் பூஜா முறைகள் ஆகம சாஸ்திரத்துடன் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. சிவாச்சாரியர்கள் அன்புடன் இறைவனைத் தரிசனம் செய்துவைத்தனர். கோவில் மிகச் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கிறது. மனம் மிகவும் அமைதியாய் விளங்குகிறது.

(Sd) ரெ. மீனுட்சிசுந்தரம்,

21—9—71. செயலாளர், இந்து தர்ம மன்றம்.

சீர்காழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி ஆலயத்திற்கு வந்து தரிசனம் செய்து வழிபட்டேன். ஆலயம் மிகவும் சுத்தமாகவும் ஆண்டவன் அடிதொழும் பக்தர்கள் எந்தவகையிலும் அமைதி தவழுகின்ற நிலையிலும் உள்ளது.

(Sd.) D. R. Perumal, M.L.A.
Karupathoconthotam,
At Aruppukottai
Ramanathapuram Dt.

25—9—71.

"We had darsan in this ancient and historic shrine and were fortunate enough to have the blessings of this powerful deity. The solemn and serene atmosphere prevailing in the temple premises is commendable."

(Sd.) G. Ramanujam,
Judge, High Court, Madras.

28—9—71.

**Dharmapuram Adhinam**

Sri Kambahareswaraswamy Devasthanam, Tirubuvanam.

சென்னை தியாகராயநகர், இந்து தர்ம மன்றத்தின் சார்பில் காமகோடி ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அருளாணைக் கிணங்க க்ஷேத்ராடனம் செய்து வருகிறோம்.

இன்று திரிபுவனம் தரிசனம் கிடைத்தது. நிர்வாக அலுவலர் அவர்களின் இனிமையான வரவேற்பு, ஸ்ரீ சிவாசாரியாரின் ஆகம முறைப்படிபூஜை, ஓதுவார் அவர்களின் தேவார இசை இவைகள் எங்கள் மனதை மிகவும் கவர்ந்தது. குறிப்பாக கோயில் மிகவும் துப்புரவாகவும் தூய்மையாக இருப்பது மிகச் சிறப்பு.

(ஒ-ம்.) ரா. மீனாட்சிசுந்தரம்,
செயலாளர்.

24—9—71.

## மஹாசரஸ்வதி




கண்டாசூல ஹலானி சங்கமுஸலே சக்ரம் தனுஸ் ஸாயகம்
ஹஸ்தாப்ஜைர் தததீம் கனந்த விலஸத் சீதாம்சு துல்யப்ரபாம்
கௌரீ தேஹ ஸமுத்பவாம் த்ரிஜகதா மாதார பூதாம் மஹா
பூர்வாமத்ர ஸரஸ்வதீ மனுபஜே சும்பாதி தைத்யார்த்தினீம்

## மஹாகாளி



கட்கம் சக்ர கதேஷு சாப பரிகான் சூலம் புசுண்டீம் சிர ;
சங்கம் ஸந்தததீம் கரைஸ்த்ரிநயனும் ஸர்வாங்க பூஷா வ்ருதாம்
நீலாச்ம த்யுதி மாஸ்ய பாத தசகாம் ஸேவே மஹாகாளிகாம்
யாமஸ்தௌத் ஸ்வபிதே ஹரௌ கமலஜோ ஹந்தும் மதும் கைடபம்

திருச்செந்தூர் - முருகக்கடவுள்



முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—யொருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்காலெப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

## ஸ்ரீ வள்ளி தெய்வயானையுடன் ஸ்ரீ ஆறுமுகப்பெருமான்



அஞ்சு முகந்தோன்றில் ஆறு முகந்தோன்றும்
வெஞ்சமரி லஞ்சலென வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கி லிருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

# திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

## மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

**திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை**

( மலர் 30. இதழ் 10 . பக்கம் 543 இன் தொடர்ச்சி )

சுகமணி யங்கை மங்கைபங் காநின்
துணையடி பற்றினேற் கருள்கற்
பகமணி யலங்கற் றிண்புய மகவான்
பழிதொலைத் தருளிய பரமேய
நிகமணி யவிர் சூட் டரவணிமுதலே
நீள்சினைப் பலவுகுங் குமங்க
னகமணி யகிலா ரமுந்தரு பொன்னி
நலமுறை யாற்றொளிர் வடிவே. 18

(இ - ள்) கற்பகம் அணி அலங்கல் திண்புயம்மகவான் - கற்பக மரத்தின் மலராற் றொடுக்கப்பட்ட அழகிய மாலையினைத் தரித்த வலிய தோள்களையுடைய சதமகன் எனும் பெயர் பூண்ட இந்திரனுடைய, பழிதொலைத்து அருளிய பரம் ஏ - பழியைப் போக்கி அருள்புரிந்த மேலானவரே! நி - நிலைபெறுக, கம் - திருமுடியின்கண், மணி - மாணிக்கம், அவிர் - விளங்குகின்ற, சூட்டு - உச்சிக் கொண்டையினையுடைய, அரவு - பாம்பினை, அணி - தரித்திராநின்ற, முதலே - பரம்பொருளே, (கம், சூட்டு நி அவிர்மணி அரவு முதல் ஏ) நீள் சினை பலவு - நீண்ட கொம்புகளையுடைய (கிளைகளையுடைய) பலா மரங்களையும். குங்குமம் - குங்கும மரத்தினையும், கனகம் - பொன்னையும், மணி - முத்துக்களையும், அகில் - அகில் மரங்களையும், ஆரமும் - சந்தன மரங்களையும், தரு - அடித்துக் கொண்டுவருகின்ற. பொன்னி - காவிரியாற்றின், நலம்உறு - வளமிக்கூர்ந்த, ஐயாற்று ஒளிர் வடிவே - திருவையாற்றின்கண் திருக்கோயில் கொண்டெழுந் தருளியுள்ள சோதி யுருவானவரே! சுக - சிவமானவரே. மணி - பளிங்காலாகிய செபமாலையினை, அம்கை கொங்கை பங்க! - அழகிய திருக்கரத்தினிலுடைய திரிபுரசுந்தரி யெனும் பெயர்புனை

அறம் வளர்த்த நாயகியாரை, இடதுபாகத்திலுடையவரே நின்துணை அடி - தேவரீருடைய இருதிருவடிகளையும், பற்றி னேற்கு - பற்றுக்கோடாயுள்ள ஏழையேற்கு, அருள் - அருள் புரிவீராக.

(கு - ரை) நூறுவேள்வி புரிந்தால் இந்திரபதவி கிட்டிடும்; அதுபோது சதமகன் எனப் பெயர் பெறுவான். நி - நிலை.

இந்திரன் பழிதீர்த்த வரலாறு :- ஒருமுறை தேவகுருவாகிய வியாழப்புத்தேள் இந்திரனுடைய சபைக்குவர அவரைக்கண்டு மரியாதை புரியாததனல் ஆசாரியர் மறைந்தனர். பின்னர்த் தெளிந்து ஆசாரியரைத் தேடியுங் காணுமல் பிரமதேவனிடங் குறைகூறப் பிரமன் வினைவிளைவறிந்து துவட்டாவின் புத்திரனுகிய விச்சுவவுருவனைக் குருவாகக்கொள்க என, அவ்வகை கொண்ட பின்னர், ஒரு வேள்வி செய்ய உடன்பட்டு வாக்கால் தேவர்க்கு ஆக்கங்கூறி மனதினுல் அசுரர்க்கு ஆக்கமுண்டாக தேவர் துன்பம் அடைக என வேள்வி செய்தலை ஞானநோக்கினுல் இந்திரன் உணர்ந்து, வச்சிராயுதத்தினுல் அவனது மூன்று தலைகளும் கழுகு, பருந்து, காகம் ஆகிய மூன்று பறவைகளாக வெட்டினன். அதனுல் பிரமகத்தியடைய அதனை மரம், மண், மங்கையர் முதலியவர்க்குத் தேவர் பகுந்தளிக்கச் சுத்தமடைந்திருந்தனன் இந்திரன். விச்சுவவுருவனுக்குத் தந்தையாகிய விருத்திரன், தன்குமரன் இந்திரனுல் இறந்ததறிந்து ஒருவேள்வி செய்துஅதில் விருத்திராசுரனை யுண்டாக்கி இந்திரன்மீது ஏவ அவ்வசுரன் இந்திரனிடம் போர்புரியவரச்சண்டையிட்டுத் தோல்வியடைந்து ததீசி முனிவர் தந்த முதுகெலும்பால் புதிய வச்சிரஞ் செய்துகொண்டு, அவன் நடுக்கடலில் தவஞ்செய்வதுபோல் ஒளித்திருத்தலால் அகத்தியரை வேண்டிக் கடலைப் பானஞ் செய்வித்து அவனைக் கொலை புரிந்தனன் (விருத்திரனைக்கொல்ல விட்டுணுவிடம் சக்தி பெற்றவன் என்பர்) பிரமகத்தி யடைந்து தீர்த்த யாத்திரையால் பவித்திரனுனவன். (திருவிளையாடற் புராணம்).

வடிவலம் புகத்தேன் ஒழுகெழில் வனசம்
வரிவளை சுரிமுக மயிலை
இடிவலம் புரியும் பிளப்பவொண் டரள
வினமணி யொளிர்தடம் பணையும்
கடிவலம் புதங்கள் கண்படு மதிலுங்
கவினுறச் சூழுமை யாரு !
துடிவலம் புனைந்தோய் நாயினேன் பிறவித்
துன்பற வரந்தரு மிறையே 19

(இ - ள்) துடிவலம் புனைந்தோய் - உடுக்கையினை வலக் கரத்தில் தரித்திருப்பவரே, (இதுபடைப்பிற் கறிகுறி) இறையே; வடி அலம்புக - சுரந்து ததும்ப (அழகிதாகத் ததும்ப) தேன் ஒழுக - தேன் சொரியும். எழில் வனசம் - அழகிய தாமரையும், வரிவளை - கீற்றுள்ள சங்கமும், (சுரிமுகம்) மயிலை - சேற்றிடத் துறும் மீனும், (சுரிமுகவரிவளை) எனவும் கோடலாம். இடி வலம்புரியும் - குமுறுகின்ற வலம்புரிச்சங்கமும். பிளப்ப - வெடிப்ப: தோன்ற (ஆயவிவ்விடங்களில் வெடித்துத் தோன்ற) உண்டா கிய, ஒண்தரளம் இனம்மணி - ஒளிபொருந்திய முத்துக்களாகிய மணிக் குவியல்கள், ஒளிர்தடம்பணையும் - விட்டுவிட்டு ஒளிவீசும் வளமுடைய பரந்த மருத நிலங்களும், கடி - காப்புடைய, வல் - வலிமையுடைய (மதிலும்) அம்புதங்கள் கண்படு மதிலும் - மேகக் கூட்டங்கள் வந்துறங்குதலைச் செய்கின்ற மதில்களும், கவின்உற - அழகுமிக, சூழும் - சுற்றியுள்ள, ஐயாறு - ஐயாற்றரசே! நாயி னேன் பிறவி துன்பு அற - நாயினேனுடைய பிறவித் துன்ப மானது அற்றுப்போமாறு, வரம் - பெருவரத்தினை, தரும் - தந்தருளுவீராக.

(கு - ரை) வனசம் - சேற்றிலும் நீரிலும் தோன்றும் தாமரை. சுரிமுக வரிவளை - சங்குகள், மயிலை - ஒருவகை மீன். வலம்புரி - வலமாக முறுக்கிக்கொண்டிருக்கும் சங்குகள், இடம்புரி, வலம்புரி, (திரிசங்கம்) சலஞ்சலம், பாஞ்சசன்னியம் எனப் பலவகைப்படும். அம்புதங்கள் - மேகங்கள், வனசம் - பொருளாகு பெயர். நாயி யேன் பிறவித் துன்புஅற வரம் தரும் ஐயாறு! எனக்கு அருள் புரிந்தருளுக எனலும் ஆம். முன்னது முற்றுகவும் பின்னது எச்சமாகவும் கொள்க. மணி - ஈண்டு முத்தினைக் குறித்து உள்ளது.

வரந்தர வேண்டு(ம்) முக்கணு வெனவே
மலரயன் மாதவன் மாத
வரந்தர வேந்த னிமையவர் குருவும்
வழுத்துசெஞ் சீரடிக் கடிய
வரந்தர வேட்கு மெனக்குநின் பணியாம்
வாழ்வுதந் தாள்வதுன் பரந்து
வரந்தர வேணி யைய வையாற்றுண்
மாதொடு வயங்குபே ரருளே" 20

(இ - ள்) துவர் அந்தரம் - செவ்வானம் போன்ற, வேணி ஐய! - கபர்த்தம் என்னும் திருச்சடா மகுடத்தினையுடை பெரு மானே! - ஐயாற்றுள் மாதுஒடு வயங்குபேர் அருள் ஏ - திருவை

யாறு எனும் பெரும்பதியுள் அறம்வளர்த்த நாயகியாரோடு அமர்ந்து விளங்குகின்ற பெருங்கருணை வடிவானவரே, மலர் அயன் மாதவன் மாதவர் அந்தரம் வேந்தன் இமையவர் குரு உம் - பூமிசையோனாகிய பிரமனும் திருமகளை மார்பிலுடைய திருமாலும்; பெரிய தவமுனிவரரும்; விண்ணுலகின் வேந்தனாகிய இந்திரனும், தேவகணங்களும் ஆகியோர், முக்கண் - சோமனும் சூரியனும் அக்கினியுமாகிய மூன்று திருக்கண்களையுடையவரே ! வரம் தர வேண்டும் என வழுத்து - வரம் அருளிக் காத்திடல் வேண்டும் என்று போற்றுகின்ற, செம்சீர் அடிக்கு - செவந்த சீரிய திருவடிகட்கு (செம்மலர் நோன்தாள்) அடியவர் - உரிமை பூண்டொழுகுறும் திருத்தொண்டர்களுடைய. அந்தரம் - உள்ளத் திடைமிளிரும் அருட் பொருளை, வேட்கும் (வேட்கும்) கொடுக்க வென விரும்புகின்ற, எனக்கும் - அடியவனுக்கும், நின் பணிஆம் (ஆகும்) வாழ்வுதந்து ஆள்வது உன்பரம் - தேவரீருக்குத் தொண்டு பூண்டொழுகும் பணியாகிய வாழ்வினைத் தந்து ஆள்வதும் தேவரீருடைய பரமாகும். (பொறுப்பு ஆகும்).

(கு - ரை) துவர் - செவப்பு. அந்தரம் - விண்ணுலகு, வேந்தன் - இந்திரன். வயங்குதல் - விளங்கல்.

"உடையாளுன் றன் நடுவிருக்கும் ........... அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியாய்" என்னும் திருவாசக அடியினைக் குறிப்பிக்கின்றது இச்செய்யுள். தேவர்கள் போற்றும் தேவாதி தேவன் மகாதேவன் என்னும் பெருந்திருநாமங் குறிப்பிக்கப் பெறுகின்றது.

(தொடரும்)

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi

' This is a very important temple attracting several people from the whole of India. The performance of pooja is strictly in accordance with ritual principles, which I appreciate very much. "

(Sd.) B. D. Jatti,

18—9—71. Lt. Governor of Pondicherry.

# சேக்கிழார் காட்டும் நாடுகளும் ஊர்களும்

செஞ்சொற்கொண்டல், புலவர்,

**திரு. சொ. சிங்காரவேலன்** M. A., Dip. Ling

( மலர் 30, இதழ் 10, பக்கம் 553 இன் தொடர்ச்சி )

" படர்ந்த பேரொளிப் பன்மணிவீதிபார்
இடந்த ஏனமும் அன்னமும் தேடுவார்
தொடர்ந்து கொண்டவன் தொண்டர்க்குத் தூதுபோய்
நடந்த செந்தா மரையடி நாறுமால் "

திருவாரூரில் உள்ள அஃறிணை உயிர்களும்கூடத் தேவாரப் பதிகங்களைக் கூறியும் கேட்டும் இன்புறும் என்று கூறி மகிழ் கின்றார்.

" உள்ளம் ஆர் உருகாதவர் ஊர்விடை
வள்ளலார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதிகங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள் "

கிளிகள் திருப்பதிகங்களைப் பாடிடக் கேட்டு மகிழ்கின்றனவாம் நாகணவாய்ப் பறவைகள். ஆவண வீதிகள், முதலிய பல வீதி களில் சைவ முனிவர்கள், மறையவர் முதலிய அனைவரும் வாழ்ந்தனர். தன்மகனைத் தேர்க்காலில் இட்ட சோழப்பெரு மன்னன் நீதி முறையால் இவ்வூர் மேலும் சிறப்புற்றதைச் சுவை யொழுகச் சொல்லி முடிக்கின்றார் அருட்கவிஞர்.

அமர்நீதியார் பிறந்த ஊராகிய பழையாறையைச் சிறப்பிக் கின்றார். ஒரு பெருநகரம் என்று குறிப்பாகப்பெற வைக்கின்றார். இவ்வாறே எறிபத்தர் வரலாற்றில் கருவூர் கூறப்பெறுகின்றது. கோநகரங்களுள் ஒன்று அது என்பதனை இனிய கவியழகு தோன்ற இப்படிப் பாடுகின்றார்;

"பொன்மலைப் புலிநின்றோங்கப் புதுமலை இடித்துப் போற்றும்
அந்நெறி வழியேயாக அயல்வழி அடைத்த சோழன்
மன்னிய அநபாயன்சீர் மரபின் மாநகரமாகும்
தொன்னெடுங் கருவூர் என்னும் சுடர்மணி வீதிமூதூர்"

எயினனூர், கடவூர், கஞ்சாறூர், கணமங்கலம், புகலூர், தலையூர், சேய்ஞலூர், திருவாரூர், மணமேற்குடி, திருப்பெருமங்கலம், திங்களூர், திருவாக்கூர், திருச்செங்காட்டங்குடி, நாகைப்பட்டினம், பெண்ணாகடம், நீடூர், கொடும்பாளூர், நாட்டியத்தான்குடி, எருக்கத்தம்புலியூர் ஆகிய ஏனைய ஊர்களையும் இயற்கை நலமும் பிறநலங்களும் தோன்ற ஆசிரியர் கூறியுள்ளார்.

வடநாட்டுத் திருத்தலங்கள் சிலவற்றையும் வாயாரப் புகழும் பேறு சேக்கிழார்க்கு வாய்க்கின்றது. அப்பரது வடநாட்டு யாத்திரையை முறைபிறழாமற் சொல்லி வருகின்றார். தெலுங்கு நாட்டினைக் கடந்து கன்னடம் எய்தினர்; மாவை தேயத்தினைப் பின்னர் நண்ணினர். மத்திய பைதிரத்தினை அதன்பிறகு அடைந்தார். அன்னநாடு கடந்து கங்கையை அணைந்து, வாரணசி விருப்பினுடன் பணிந்து கற்சுரம் முந்தினர். கயிலை செல்லும் வழியிற் கடுகினர் என்று தொடர்ந்து பாடுகின்றார் சேக்கிழார். அப்பர் சென்ற வழியினை மிகத் தெளிவாக வரலாற்றுணர்வுடன் பாடும் திறத்தினை இங்குக் காண்கின்றோம். தெற்கிலிருந்து வடக்கே சென்ற இத்திறத்தினைப் பாடுதல் போன்றே, திருமூலர் வரலாறு கூறுங்கால், வடக்கிலிருந்து தெற்கே வரும் திறம் சேக்கிழாராற் பாடப்பெற்றுள்ளது. ஆனால் அது சுருக்கமாகவே சொல்லப் பெற்றுள்ளது. மன்னுதிருக் கேதாரம் வழிபட்ட மாமுனிவர் பன்னுபுகழ்ப் பசுபதியாருறையும் நேபாளத்தைப் பணிந்தேத்தியபின் கங்கைக் கரையடைந்தார் என்றும், அவிமுத்தம் பணிந்து, விந்த பருப்பதம் கடந்து காளத்திமலை சேர்ந்தார் என்றும் கூறுகின்றார்.

தொண்டை நாட்டினையும், பாண்டி நாட்டையும், சேர நாட்டையும் ஆங்காங்குப் புகழ்ந்திடச் சேக்கிழார் தவறவில்லை. நாயன்மார்கள் தோன்றியதும், சார்ந்ததும், சென்று வழிபட்டதும், திருத்தொண்டு சிறந்ததும் ஆகிய ஊர்களையே சிறப்பிக்க வேண்டிய வரையறை இவ்வருளாசிரியர்க்கு இருந்தது என்பதை நாம் நினைவிற் கொண்டே இக்குறிப்புக்கள் அனைத்தினையும் நோக்குதல் வேண்டும்.

"சீர்மன்னு செல்வக்குடி மல்குசிறப்பின் ஓங்கும்
கார்மன்னு சென்னிக் கதிர்மாமணி மாடவைப்பு
நார்மன்னு சிந்தைப் பலநற்றுறை மாந்தர்போற்றும்
பார்மன்னு தொன்மைப் புகழ் பூண்டது பாண்டிநாடு"

என்று பாண்டி நாட்டைப் புகழ்கின்றவர், 'ஞாலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்' மணம்வீசிய திறத்தைச் சுட்டாமல் இருக்கவில்லை.

திருவஞ்சைக்களம், கொடுங்கோளூர் முதலிய நற்றலங்களை விளக்கப் புகுங்கால் சேரநாட்டுத்திறன் செப்பிடக் காண்கின்றோம். திருக்குறிப்புத் தொண்டர் திருவரலாறு கூறுங்கால் தொண்டை நாட்டின் வளத்தை வாயாரப் பாடி மகிழ்கின்றார் சேக்கிழார். ஏழத்தாழ நூற்றைம்பது செய்யுட்கள் இங்கு வெள்ளமாகப் பாய்கின்றன.

"ஆயநானிலத் தமைதியில் தத்தமக்கடுத்த
மேய செய்தொழில் வேறுபல் குலங்களின் விளங்கித்
தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தைத்
தூயமாந்தர்வாழ் தொண்டை நாட்டியல் சொல்வரைத்தோ"

என்று முடிக்கின்றார். காஞ்சி, திருவொற்றியூர், மயிலாப்பூர், ஆகிய தலங்கள் இந்நாட்டிற் பெரிதும் புகழப்பெற்றவை என்று கூறலாம்.

தமிழர் கடல் வாணிகம் சிறப்புற்ற தலங்களாகப் பூம்புகார், நாகபட்டினம், காரைக்கால், மகாபலிபுரம் முதலியவை குறிக்கப் பெற்றுள்ளன. சேய்ஞலூர், தில்லை, திருவெண்ணெய்நல்லூர் ஆகிய ஊர்கள் மறையவர் வாழும் மாண்புடையவையாகக் கூறப்பெற்றுள்ளன. திருவெண்ணெய்நல்லூர் மறையவர் அவை சிறப்புறக் கூறப்பெற்றுள்ளது.

இதுகாறும் கூறப்பெற்ற குறிப்புக்களிலிருந்து கீழ்வரும் நாடுகள்பற்றிச் சேக்கிழார் விளக்கமாகவும் சுருக்கமாகவும் கூறியுள்ளமை அறியப்படும்:

(1) சேரநாடு — நாயன்மார் - இருவர்
(2) சோழநாடு — நாயன்மார் - முப்பத்தெழுவர்
(3) மலைநாடு — நாயன்மார் - இருவர்
(4) பண்டியநாடு — நாயன்மார் - ஐவர்
(5) நடுநாடு — நாயன்மார் - எழுவர்
(6) தொண்டைநாடு — நாயன்மார் - எண்மர்

திருநாவலூரர், மானக்கஞ்சாறர், இளையான்குடிமாறர் ஆகிய மூன்று நாயன்மார்கள் ஊர் காரணமாகப் பெயர் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

# கொல்லிமலைத் தமிழ்

## —ஓர் அறிமுகம்*

டாக்டர் திரு. கி. கருணாகரன், எம். ஏ., பிஎச். டி.

மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

மொழிகளை ஆராயும் கலை மிகவும் பழமையான ஒன்றாகும். மொழிகளை அன்றும் ஆராய்ந்தார்கள் - இன்றும் ஆராய்கிறார்கள் - ஆராய்ந்து வருகிறார்கள். இந்த நூற்றாண்டில் அறிவியல் அடிப்படையிலான மொழியியலின் ஒப்பற்ற நல் வளர்ச்சி மொழிகளைப் பற்றிய ஆய்வுக்குப் புது ஒளியும் மெருகும் கொடுத்து வருகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

மனித மொழியின் அமைப்பு மிகவும் சிக்கல் வாய்ந்த ஒரு அமைப்பு ஆகும். மொழியின் எப்பகுதியை எடுத்து அலசி ஆராய்ந்து பார்த்தாலும் அப்பகுதியின் உறுப்புக்கள் ஒன்றினுள் ஒன்றாய், ஒன்றினுள் பலவாய் அடங்கி முழுமை பெற்று விளங்குவதை நாம் காணமுடிகிறது. இந்த முழுமைக்குள் ஒரு ஒழுங்கு முறை இருப்பதையும் நாம் காணமுடிகிறது. அதன் உறுப்புக்கள் தனித்தனியாக இருக்கும். ஆனால் பயன்படும்போதோ அவை ஒருமையாய் இயங்கும்.

---

*1969 ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் Ph. D. பட்டத்திற்காக 'கொல்லிமலைத் தமிழின் இலக்கண அமைப்பு' (A Descriptive Grammar of the Dialect of the Kollimalai tribes) என்ற என் ஆய்வுக் கட்டுரை; தமிழகம் தந்த மொழியில் அறிஞரும், அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் துறைப் பேராசிரியரும், அப்பல்கலைக்கழக மொழியியல் சிறப்பு ஆய்வுப்பிரிவின் இயக்குநருமான டாக்டர் திரு. ச. அகத்தியலிங்கம் எம். ஏ., பிஎச். டி. (கேரளா), பிஎச். டி., (இந்தியானா) அவர்களின் சீரிய மேற்பார்வையின் கீழ் செய்து முடிக்கப்பட்டது. இந்த ஆய்வுக் கட்டுரை 'The Kollimalai Tamil Dialect' என்ற பெயரில் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறையால் புத்தகமாகத் தற்பொழுது வெளியிடப்பட்டுள்ளது,

மனித நாகரிகம் மொழி இல்லாவிட்டால் இல்லை. மனிதன் வாழ்ந்ததும், வாழ்ந்து வருவதும், வாழப்போவதும் மொழியாலே தான். மனிதனின் பழங்காலச் சிந்தனைகளும் படைப்புக்களும் இன்றும் நின்று நிலவி வளங்கொழிக்கும் கருத்துக்களை வாழச்செய்வதற்கு உதவுவதும் மொழியேதான். மனித இனம் மொழியின் அடிப்படையில் தான் தனித்தனிச் சமுதாயங்களாகப் பிரிந்து இயங்குகிறது. மொழி தன்னுடைய பேச்சு முறையிலும் எழுத்து வடிவிலும் மனித வாழ்வோடு இணைந்துள்ளது. இதன் வளர்ச்சி மனித நாகரிகத்தின் வளர்ச்சியோடும் வாழ்வோடும் இரண்டறப் பிணைந்துள்ளது.

இவ்வாறு இரண்டறப் பிணைந்துள்ள மொழியை முன்பும் ஆராய்ந்தார்கள் - இன்றும் ஆராய்ந்து வருகிறார்கள். உலகத்தில் தெளிவாக மொழியைப் பற்றி ஆராய்ந்த பெருமை இந்தியாவுக்கு உண்டு. அதிலும் குறிப்பாகத் தமிழகத்திற்கு நிறைய உண்டு. விஞ்ஞான பூர்வமாக முன்பு மொழியை அலசி ஆராய்ந்துள்ளார்கள். இன்றும் நிலைத்து நிற்கக்கூடிய வழி வகைகளைச் சொல்லி உள்ளார்கள். என்றாலும் காலத்தின் போக்கு எல்லாவற்றையும் புதுமை இழக்கச் செய்து விடுகிறது அல்லவா ? தொல்காப்பியரும் பாணினியும் ஏற்றி வைத்த மொழி ஆராய்ச்சி விளக்கைப் பலர் நெடுந்தொலைவு வரை சுமந்து வந்திருந்தாலும், அந்த ஒளி விளக்கிற்கு ஒளியூட்டிப் பெருமை அடையச் செய்வதற்கு இன்றைய அறிவியல் அடிப்படையிலான மொழியியல் ஆராய்ச்சியே மிகவும் பயன்படுகிறது-பயன்படுத்தப் பட்டு வருகிறது எனலாம்.

மொழியால் மனிதன் சிந்திக்கிறான். மொழியால் மனிதன் எழுதுகிறான். இம்மூன்றுமே ஒரு மொழியைப் பற்றிய படிப்புக்கு-ஆராய்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதவைதான். என்றாலும் பேச்சையே மொழியியலார் மிகவும் சிறப்பாக எடுத்துக் கையாளுகிறார்கள். பேசுவதற்கு முந்தியது சிந்தனை; பேச்சுக்குப் பிந்தியது செயல்: செயலுக்கு அடுத்தவை மனிதனின் மற்ற சிந்தனைகள். ஆகவே சுருங்கக் கூறின் மொழி ஒரு சங்கிலித் தொடர்புக் கிரியை ஆகும். இச் சங்கிலித் தொடர்பில் நடுநாயகமானது பேச்சு ஆகும். அந்தப் பேச்சு ஒலி வடிவமானது. ஒலிகள் இல்லையேல் அவற்றிற்கான குறியீடுகள், எழுத்துக்கள் இல்லை. எனவே ஒரு மொழிக்கு ஒலிகள் மிகவும் தேவை.

பல மொழிகள் பல ஒலிகளை உடையனவாக உள்ளன. பல மக்கள் பலவகை ஒலிகளை உச்சரிக்கிறார்கள். ஒரே மொழி

பேசும் மக்கள் கூட ஓர் ஒலியை ஒரே விதமாக உச்சரிப்பதில்லை. எடுத்துக் காட்டாக 'ழ' என்ற ஒலியை 'ள' அல்லது 'ல' என்று பலர் உச்சரிப்பதைக் காணலாம். கொல்லிமலைத் தமிழிலும் மற்றும் பல பேச்சு மொழிகளிலும் 'ழ' என்ற ஒலி 'ள' என்றே உச்சரிக்கப்பட்டு வருகிறது. இந்த 'ழ' என்ற ஒலி தமிழகத்தின் ஒரு சில பகுதிகளைத் தவிர (தஞ்சை, திருச்சி மாவட்டங்கள், தென்னாற்காடு மாவட்டத்தின் ஒரு பகுதி மற்ற பகுதிகளில் உச்சரிக்கப்படுவதே இல்லை.

இதைப் போலவே 'ண' மற்றும் 'ற' போன்ற ஒலிகளை முறையே 'ன', 'ர' என்று உச்சரிப்பதையும் காணலாம்.

ஒரு மொழிக்குப் பெருமையும் சிறப்பும் தருவது அதன் இலக்கண வளமும், இலக்கியப் படைப்புக்களுமே ஆகும். தமிழ் மொழிக்கு முதன் முதலாக இலக்கணம் வகுத்தவர் தொல்காப்பியராவார். தொல்காப்பியம் இன்றைக்கு மிகவும் உயர்ந்த நிலையில் வைத்து, பல நாட்டு மொழி அறிஞர்கள் பலராலும் மிகவும் பாராட்டப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. இலக்கணச் செல்வமே (Grammatical treasure) அந்நூலில் அடங்கியுள்ளதாகச் சொல்லிப் போற்றப்பட்டு வருவதையும் நாம் கண்கூடாகக் காண முடிகிறது.

ஒரு மொழியின் இலக்கணத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்து அன்று இலக்கண ஆசிரியர்கள் ஆராய்ந்தார்கள். அவையாவன: 1. எழுத்து, 2. சொல், 3. பொருள் என்பனவாகும். இவற்றையே இன்றைய மொழியியல் வல்லுநர்கள் முறையே 1. ஒலி இயல் (Phonetics), 2. ஒலியன் இயல் (Phonemics), 3. சொல்லியல் (Morphemics), 4. சொற்றொடர் இயல் (Syntax), 5. பொருளியல் (Semontics) என்ற ஐந்து பெரும் பிரிவுகளில் ஆராய்கிறார்கள். இலக்கணமே ஒரு மொழியைக் கற்றுத் தருவதற்குச் சிறந்த கருவியாகப் பயன்படுகிறது எனலாம்.

ஒரு மொழியை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன: 1. எழுத்து அல்லது இலக்கிய மொழி (Literary or Written Language) 2. பேச்சு மொழி (Spoken Languages) என்பனவாகும். நான் மேற்கொண்ட ஆய்வில் பேச்சு மொழியே (கொல்லிமலைத் தமிழ்) இடம் பெற்றதால், நான் இங்கு பேச்சு மொழி பற்றி சில கருத்துக்களையும் விளக்கங்களையும் சொல்ல விரும்புகிறேன். எடுத்துக்காட்டாகப் பேச்சுத் தமிழை

எடுத்துக்கொண்டால் நாம் அதில் காணப்படும் பேச்சு வேற்றுமைகளை அறிந்து கொள்ளுகிறோம். பேச்சு மொழியை ஆங்கிலத்தில் 'Dialect' என்று மொழியியலார் சொல்வார்கள்; பேச்சு வேற்றுமைகளை 'Dialect Variations' என்று சொல்வார்கள். பேச்சு மொழியில், இப்பேச்சு வேற்றுமைகளுக்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன.

'தேசம் தோறும் பாஷை வேறு' என்ற பழமொழியை நாம் எல்லோரும் அறிவோம். அதன்படியே இன்றும் ஒரு மாவட்டக்காரர் மற்றொரு மாவட்டக்காரருடன் பேசும்போது பேச்சு வேற்றுமைகளைக் காண முடிகிறது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் (Caste) மற்றொரு சமூகத்தைச் சேர்ந்தவரிடம் பேசும் போதும் பேச்சு வேற்றுமைகளைக் காண முடிகிறது. படித்தவர்கள் படிக்காதவர்களிடம் பேசும்போதும் அவர்களுக்கிடையே பேச்சு வேற்றுமைகள் நிறைந்து இருப்பதை நாம் உணரமுடிகிறது. மேலும் நகரத்தைச் சேர்ந்தவர்கள் நாட்டுப்புறத்தைச் சேர்ந்தவர்களிடம் பேசும்போதும் அவர்களுக்கிடையே பேச்சு வேற்றுமைகள் ஏற்படுவதைக் காணமுடிகிறது.

ஆகவே பேச்சு மொழியில் பேச்சு வேற்றுமைகள் பல நிலைகளில், பல இடங்களில், பல முறைகளில் நிறைந்து ஏற்படுகின்றன : ஏற்பட்டும் வருகின்றன என்பதை நாம் மறுக்க முடியாது—மறைக்கவும் முடியாது. இப்பேச்சு வேற்றுமைகள் உலகில் உள்ள எல்லா மொழிகளிலும் காணப்படுகின்றன.

இந்தப் பேச்சு வேற்றுமைகள் வேற்றுமை மட்டும் தருவதோடு நில்லாமல் மக்களிடையே உயர்வு தாழ்வையும் ஏற்படுத்தி விடுகின்றன. மேலும் இந்தவகையான பேச்சு மொழியேஉயர்ந்தது என்று எண்ணிப் பெரும்பாலோர் அந்த வகையான பேச்சு மொழி வழக்கையே பின்பற்றுமாறு செய்துவிடுகிறது.

எடுத்துக்காட்டாக கல்கத்தாவிலே பேசப்படுகின்ற வங்காள மொழி மதிப்பு வாய்ந்ததாக அங்குக்கருதப்படுவதால் இலக்கியங்களிலும் சமூக அந்தஸ்து பெற்றவர்களிடமும் அந்த வகையான வங்காளமொழி மிகவும் செல்வாக்குப் பெற்றுவருகிறது. அங்குப் பேச்சு மொழியே இலக்கிய உலகில் பெரும்பாலும் கையாளப் பட்டு வருவதை நாம் காண்கிறோம். அந்த நிலை இன்னும் நம் தமிழ் மொழியில் அதிக அளவில் வரவில்லை.

பேச்சிலே காணப்படும் மொழி - வேறுபாடுகளை இன்று பல்வேறு மொழியியல் வல்லுநர்கள் மிகவும் உற்சாகமாக

ஆராய்ந்து வருகிறார்கள். ஏன்என்றால் இந்தவகையான பேச்சு வேற்றுமைகள் மனிதனின் உள்ளக்கிடக்கை, சமூகத்தில் அவனது இருப்பிடம், அவனது ஆசைகள், செயல்கள், எண்ணங்கள் மற்றும் சிந்தனைகள் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டுவதுடன், அவன் சேர்ந்திருக்கும் சமுதாயம், குழு, அவற்றின் நிலைகள் போன்றவைகளையும் தெளிவாக விளக்கிக்கூறுகின்றன; அவ்வாறு கூறுவதற்கு ஏதுவாக அமைகின்றன என்று நாம் அறுதியிட்டுக் கூற முடியும்.

நமது தமிழ்மொழி தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் ஈழத்திலும் ஆப்பிரிக்க நாடுகளிலும், கீழ்த்திசை நாடுகளிலும் பேசப்பட்டு வருகிறது. தமிழ் மக்கள் எல்லாவித பிரிவுகளுக்கும் உள்ளடங்கி வருகிறார்கள். அவர்களுடைய தனித்தனிப் பேச்சு மொழிகளை, அவற்றிற்கிடையே காணப்படும் பேச்சு வேற்றுமைகளை நாம் அறிந்து கொண்டால், தமிழ் மொழியின் நெடுங்கால வளர்ச்சியையும் வழக்கையும் நம்மால் எளிதில் நன்கு அறிந்துகொள்ள முடியும்.

தமிழ் மொழியில் பேச்சு வேற்றுமைகள் இடத்திற்கு இடம் ( from region to region ) சமூகத்திற்கு சமூகம் ( from caste to caste ) நிறைந்து காணப்படுவதற்கு மிக முக்கியமான இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவையாவன : 1. தமிழ் மொழி மிகவும் தொன்மையான மொழி ஆகும்.

2. தமிழ்மொழியின் இலக்கண, இலக்கிய மரபுகள் மிகவும் செல்வாக்குப் பெற்றவையாகும். அதாவது தமிழ் மிகவும் செல்வாக்கு நிறைந்த மொழி ( Tamil is a rich Language ) ஆகும்.

ஒரு மொழி தொன்றுதொட்டுப் பேசப்பட்டு வருவதாலும், நாளுக்குநாள் உண்டாகும் மாற்றங்கள், புதிய கண்டுபிடிப்புக்கள், படைப்புக்கள், விஞ்ஞான உலகின் அதிசயங்கள் - சாதனைகள் போன்ற பலவகையான சூழ்நிலைகளாலும் அம்மொழியில் பேச்சு வேற்றுமைகள் ஏற்படுவது இயற்கையே. ஆனால் இவ்வாறு காலப்போக்கில் தமிழில் பேச்சு வேற்றுமைகள் நிறைந்து காணப்படினும் முன்சொன்ன இரண்டு காரணங்களினால் தமிழ் மொழி தனித்தன்மையும் செம்மையும் பெற்று மிகுந்த வலிவோடும் நல்ல பொலிவோடும் செல்வாக்கு நிறைந்த ஒரு தனி மொழியாக நின்று நிலவி வருகிறது.

தமிழின் பேச்சு மொழிகளில் ஒலிகள், சொல்லியன்கள், சொற்கள் போன்றவைகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டு வழங்கப்படுவதை நாம் இன்று காணமுடியும். கொல்லிமலைத் தமிழிலே

'ழ', 'ற' போன்ற ஒலிகள் காணப்படவில்லை. இவைகள் உச்சரிக்கப்பட வேண்டிய இடங்களில் 'ள', 'ர' போன்ற ஒலிகளே வழங்கப்படுகின்றன.

சொல்லியல் (Morphology) பகுதியிலும் வேறுபட்ட சில சொல்லியன்களை இத் தமிழிலே நாம் காணமுடிகிறது. எடுத்துக் காட்டாக இலக்கியத் தமிழில் ஆறும் வேற்றுமைச் சொல்லியன்கள் ((Geritive case suffixes) 'உடைய', 'அது' போன்றவைகளாகும்.

எ. காட்டு :- என்னுடைய, எனது இப்பேச்சு மொழியில் ஆறும் வேற்றுமைச் சொல்லியன்களாக — உ, — ஓட போன்றவைகள் வழங்கப்படுகின்றன.

எ. காட்டு :- என்னு, அவனோட மேலும் இலக்கியத் தமிழில் 'செயின் எனும் வாய்பாட்டு வினையெச்சச் சொல்லியன் ' (Conditional suffix) - என்பதாகும்

எ. காட்டு :- வந்தால் ( if comes ) இப்பேச்சு மொழியில் 'செயின்' - ஆக்கா என்பதாகும்.

எ. காட்டு :- வந்தாக்க ( if comes ) இதுபோன்று இன்னும் சில சொல்லியன் வேறுபாடுகளைக் கொல்லிமலைத் தமிழில் நாம் காண முடியும்.

மூன்றாவது நிலையான 'சொற்கள்' (Lexicon) பகுதியிலும் பல வேறுபட்ட சொற்களைக் காண முடிகிறது. இலக்கியத் தமிழில் வழங்கப்படும் அங்கு, இங்கு, எங்கு போன்றவைகள் அஞ்செ. இஞ்செ, எஞ்செ என்றும், அகுட்டு, இகுட்டு, எகுட்டு என்றும் வழங்கப் படுகின்றன. என் ஆய்வுக் கட்டுரையின் கடைசிப் பகுதியில் இந்த வேறுபட்ட சொற்களைத் (ஏறக்குறைய 400-க்கும் மேற்பட்ட சொற்கள்) தொகுத்துக் கொடுத்துள்ளேன். இந்தப் பேச்சு மொழியைத் தமிழ் நாட்டில் பேசப்பட்டுவரும் வேறுசில பேச்சுமொழிகளுடனும், இலக்கியத் தமிழுடனும் ஒப்புமைசெய்து, இவற்றிற்கிடையே காணப்படும் மொழி வேறுபாடுகளை எல்லாம் தொகுத்துக் காட்டியுள்ளேன்.

காலப்போக்கில் தமிழ் தன் இலக்கண வளத்தை இவ்வளவு மாறுதல்களுக்கு இடையேயும் பெருக்கிக்கொண்டே வந்து உள்ளது. தமிழின் சொல்வளம், சொற்றொடர் வளம், பொருள் வளம், சொல்லாக்கத்திறன், இலக்கண மரபுகள் போன்றவைகள் செம்மையானபடி காப்பாற்றப்பட்டும் இன்னும் சிறப்பாக வளர்ந்தும் வருவதை நாம் கண்கூடாகக் காண முடிகிறது.

வாழ்க தமிழ்! வளர்க அதன் மொழிவளம்!

# " கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

வித்துவான். திருமதி. ப, நீலா

( மலர் 30, இதழ் 9, பக்கம் 488 இன் தொடர்ச்சி )

## 44. இசைவாது வென்றது

கூடலம்பதியில் ஆடகமேருவை வில்லாகக்கொண்ட குரிசில் அடியவன் பாணபத்திரனுக்காகப் பலகையிட்ட பரிசுகண்டோம். இனி அப்பாணனின் மனைவி இறைவனருளால் யாழ்வழிபாடி வாதுவென்றவற்றைக் காண்போம்.

வரகுண பாண்டியன் பரமனருள் பெற்றுப் பரகதியடைந்த பின்பு இராசராசப் பாண்டியன் புவிமடந்தையை வேட்டு அவள் புயந்தழீஇக்கொண்டு நயந்தருள்கின்ருள். அந்தப் பஞ்சவனின் அன்புக்குரிய மனைவியரும் காமக் கிழத்தியரும் பலராவர். அவருள் அரசனுக்கு அமுதும் ஆவியுமாக இருப்பவளொருத்தி, ஒருநாள் பாணபத்திரனின் பத்தினியுடன் இசையில் போட்டியிட முந்தினுள். பாணனின் மனைவியான இவளை இன்னெரு பாடினியால் வெல்வேன் என்று உறுதிபூண்டு மன்னனுக்கு இதனை அறிவித்தாள். மனைவியின் சொற்படியே நடக்கும் மகீபனும் உடனே ஈழநாட்டிலிருந்து யாழ்வல்ல விறலியை வரவழைத்தான்.

இசை பாடி வெல்ல வருக :

கட்டமைந்த யாழை முதுகில் தொங்கவிட்டுப் பாடும் ஆயம் புடைசூழ ஈழத்திலிருந்து வந்த பாடினி வேந்தனை வணங்கி நிற்க 'ஒரு பெண்ணால் தனக்கு வரும் பழிநோக் காத' பாண்டியன் அவளைநோக்கி, விறலியே! நீ, பாணபத்திரன் துணைவியைப் பாட அழைக்க வேண்டும். அதற்கு அவள் மறுத்தாலோ; அல்லது அவள் சார்பில் நின்று நாம் தடுத்தாலோ - நீ அமையக் கூடாது. அவளைப்போகவொட்டாமல் தடுத்து அவள் நாண முறும்படியாக வாதிற்கு அழைக்கவேண்டும். இதுவே

நீயாற்றவேண்டிய பணி; இன்று சென்று, இதனை நிறைவேற்ற நாளைவாவென்று - அந்தப் பாடினியை அனுப்பிவைத்தான்.

பின்னர் பத்திரனின் காதலியை அழைத்து, உள்ளத்திலொன்றும் புறத்திலொன்றுமாக அரசன் விறலியே 'இச்சபைக்கு இலங்கையிலிருந்து பாடினியொருத்தி வந்துள்ளாள், அவள் தன்னை இசையில் வெல்ல வல்லார் யாருமேயில்லை-என இறுமாந்திருக்கிருள். ஆடமைத் தோளினுய் அவளொடுங்கூடப் பாடநீ வல்லையோ'-என்று கேட்டான். பாணனின் இல்லக்கிழத்தி அதற்கு எனது கற்பின் திண்மையாலும் கூடலெம் பெருமானின் அருளாலும் அவளை வெற்றி கொள்வேன் - என உத்திரங்கூற அவளையும் நாளை வருக - என்று கூறி விடைகொடுத்தனுப்பினன்.

## இசைப்போட்டியும் தென்னவன் தீர்ப்பும் :

மறுநாள் இராசராச பாண்டியன் அவைக்கு இரு பாடினிகளும் வந்தனர். கலமேறிவந்த காரிகை மதுரைப் பாடினியைப் பார்த்து முதலில் சில வினக்களைத் தொடுத்தாள். இசைநூல் வல்லவளானல் இவைகளுக்கு விடைகூறு! இசைக்குரிய குணங்கள் என்னென்ன! குற்றங்கள் எத்தனை! யாழுக்குரிய தெய்வம் எது? உயிர், மெய், உயிர்மெய் எழுத்துக்களுக்குரிய மாத்திரைகள் எவ்வளவு! - என்று தொடர்ந்து கேட்கவும் — பத்திரனின் மனைவி வாயால் நிகழ்த்தும் இவ்வாதிற்கு நான் வல்லேனல்லேன் அது உன்னைப் போல மானத்தை விற்றுப் பிழைப்போருக்கு உரியது. யாழில் பாடும் இசைப் போட்டியில் உன்னை வெல்வேன் - என்று கூற பாண்டியன் இருவர்க்கும் நடுவாக நின்று வீண் வார்த்தை ஏன்! உங்களில் யார் யாழிசையால் தோற்று நிற்பீர்களோ அவர் மற்றவருக்கு அடிமை; தொடங்கட்டும் போட்டி என அவர்களின் மான உணர்வைத் தூண்டி விட்டான்.

உடனே ஈழநாட்டு விறலி யாழை இடப்புறம் தழுவிக் கொண்டு அரும்பனைய விரல்கள் நரம்பைத்தடவ, ஏழிசையை எழுப்பி மன்னவனின் மனக்கினிய காமக்கிழத்தியின் சொல் போன்ற அமுதகீதத்தை இசைத்தாள். பாணர் கோமகனின் துணைவி அடுத்து யாழ்வாங்கி மாடகத்தை முறுக்கி நரம்பை மீட்டினுள். வானசஞ்சாரிகளான இயக்கர்களும் நாணி நிற்கும் படி அமுத இசையால் அவையினரின் செவிகளை நிறைத்தாள். அரசனது உள்ளமுணராத அவையோர் அனைவரும் பாணனின் மனைவியே நன்கு பாடினுள் என்று பாராட்டினர். அரசனே தன் மனைவியின் கருத்துப்படி இலங்கை நகரிலிருந்து வந்த

பெண்ணின் கலையைப் பாராட்ட உடனே அங்கிருந்தவர்கள் சற்றும் தாமதியாமல் மன்னனின் கருத்தை யொட்டியே தம் கருத்தைக் காட்டினர். இந்த உலக ஆசைகளையெல்லாம் முற்றும் துறந்த முனிவர்களாயிருந்தாலும் மன்னவன் சொன்னவாறே சொல்வதுதான் வழக்காறு அல்லவா!

தென்னவ னுட்கோ ளெல்லை
தெரிந்தன ரவையத் துள்ளார்
அன்னவன் புகழ்ந்த வாறே
புகழ்ந்தன ரவளைத் தானே
முன்னவ னருளைப் பெற்று
மும்மையுந் துறந்தோ ரேனும்
மன்னவன் சொன்ன வாறே
சொல்வது வழக்கா றன்றே

காமக்கிழத்தியின் மையலில் சிக்கிய புரவலன் அவையோரைப் பார்த்து 'இவ்விசைப் போட்டியின் முடிவு இன்றொரு நாளிலேயே தெரியுமோ - விறலியர்களே நாளையும் இவண் வந்து பாடுக' என்று கூறி எல்லோருக்கும் விடைதந்து அனுப்பிவைத்தான். விருந்தாக வந்த விறலி மன்னவன் தன்பாடலிலேயே மயங்கினன் என்ற செருக்கில் மலரணைமேல் மனக்களிப்புடன் இருந்தாள்.

கற்போடுங் கவினோடுங் கூடிய இம் மதங்கியோ மனம்மிக நொந்து குணங்குறிகடந்த அங்கயற்கண்ணி பங்கனை அண்மி தன் குறைகூறி நின்றாள்.

## நாளை நீயே வெல்வாய்:

தென்னவனாகிய செங்கோல் செலுத்தும் மன்னவன் தன் மனஞ்சென்ற வழியில் நீதிசொல்கின்றான். அவையினரும் அவனுக்கஞ்சி அவன் மொழிந்ததையே மொழிகின்றார்கள். இனி, எனக்கு நீதி கிடைக்குமாறு எங்ஙனம்? என்று கசிந்துருகி நிற்கும் அவள் கேட்க 'நாளை நீயே இசையில் வெல்வாய் - கவலற்க' என்ற வானொலி யெழுந்தது. அகமெல்லாம் மகிழ்வு மலர் விரிய மனையடைந்தாள் அம்மடந்தை.

## இறைவன் முன்நடந்த இசைப்போட்டி:

மறுநாள் இராசராசன் அவைக்களத்தில் இருவரும்பாட - பாண்டியன் ஈழத்து விறலிக்கே சார்பாய்ப் பேச அவையினரும்

அதனையே ஆமோதித்தனர். உடனே பாணன் மனைவி 'வையத்தை மனு வழியில் நின்று காக்கவேண்டிய நீயும் உன்அவையினரும் ஒருதலைப் பக்கமாகத் தீர்ப்புக் கூறுவது சற்றும் பொருத்தமாக இல்லை. ஆதலால் துலையின் நாப்போல் நீதிகூறும் சோமசுந்தரப் பெருமான் திருமுன் நாங்கள் பாடுகின்றோம். அங்கு யாராவது ஒருவர் எங்களின் தகுதியை அறிந்து தீர்ப்புச் சொல்லட்டும்'- என்று கூற வேந்தனும் அதற்கிசைந்தான்.

எல்லாம் வல்ல பெருமானின் திருக்கோயிலுக்கு மன்னனும் மற்றவர்களும் வந்து சேர்ந்தார்கள். வங்கத்தின் வழிவந்த மங்கையை மன்னன் அழைக்கவும் அவள் 'இன்றே பாணன் மனைவி எனக்கு அடிமையாவது நிச்சயம்'- என்று கடிது வந்தாள். பத்திரன் மனைவி கற்புடன் கூடிய பொற்போடும் சிற்பரஞ் சுடர் சேவடிமேல் வைத்த அன்போடும் மெல்லவே வந்தாள். முத்துமாலைகளையும், தோளணிகளையுந் தாங்கிய சோமசுந்தரப்பெருமானும் கலைஞர் குழாத்திடை ஒருவராக வந்து அமர்ந்தார்.

கலத்தில் வந்த காரிகை முதலில் பாட அவையோர் ஒன்றுங் கூறுமல் அமைந்திருந்தனர். வீணையை இடத்தோளிலணைத்து மதுரைப் பாடினி பத்மாசனத்திலமர்ந்து பாட ஆரம்பித்தாள்.

கையில் நீரும் இலையுங் கொண்டு உன்னை வழிபட்டவர்க்கு இமையாக் குஞ்சரமும் (ஐராவதத்தின் மேல் வரும் இந்திரபதவி) படங்கொள் பாயும் (அனந்தசயனத்திலுறங்கும் திருமால் பதவி) பூவணையும் (பூவின் மேலுள்ள பிரம பதவி) தருவாய், ஆனால் நீ கையில் கபால மேந்தி இல்லந்தோறும் இரக்கின்றாய் - என்று ஏசுவார்க்கு என்ன பேசுவேன்.

தேன்மொழி பேசும் மாதர் விழிவழி செல்லாதவர்க்கே வீடு பேறு தருவோமென்று வேதப் பொருளுரைத்தாய், ஆனால் நீ பாதி நாரியுருவாய் இருக்கிறாய் என்று பிறர் பழித்தால் நான் யாது செய்வேன்.

எல்லோருக்கும் வரந்தரும் தயாளனாகி மாயாமல வலியொழித்து வீடுதரும் சக்தியுடையவனாகிய நீ வீடடைய முயல்வார் போல யோகியாய் இருக்கிறாய் என்று பழிப்பார்க்கு என்ன பதில் சொல்வேன் — என்று பரிந்துருகிப் பாடினாள்.

குடங்கை நீரும் பச்சிலையும்
இடுவார்க் கிமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையுந்
தருவாய் மதுரைப் பரமேட்டி
படங்கொள் பாயும் பூவணையுந்
தருவாய் கையிற் படுதலைகொண்டு
இடங்கள் தோறும் இரப்பா யென்று
ஏசு வார்க்கென் பேசுவனே.

தேனார் மொழியார் விழிவழியே
செல்லா தவர்க்கே வீடென்று
நானு வேதப் பொருளுரைத்தாய்
நீயே மதுரை நம்பரனே
நானு வேதப் பொருளுரைத்தாய்
நீயே பாதி நாரியுரு
ஆனாய் என்று பிறர்பழித்தால்
அடியேன் விடையேது அறைவேனே.

வரத னாகி எவ்வுயிர்க்கும்
மாயா விருத்தி வலியடக்கிச்
சரத மான வீட்டின்பந்
தருவாய் மதுரைத் தனிமுதலே
சரத மான வீட்டின்பந்
தருவாய் வீடு பெறுவார்போல்
விரத யோக நிலையடைந்தாய்
என்பார்க் கென்நான் விளம்புவனே.

இத்தகைய உள்ளாள கீதத்தினை, பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, கையூழ், விளையாட்டு, குறும் போக்கு என்னும் முதற் றெழில் எட்டோடும், வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், எள்ளல், பட்டடை என்னும் இசைக்கரணம் வழுவாமல் பாடும்போது கண் இமைக் காமலும், மிடறு வீங்காமலும், எயிறு வெளிப்படாமலும், புருவம் நெற்றியில் ஏறாமலும் பாடினாள். மண்ணவர் செவிக்கேயன்றி வானவர் செவிக்கும் வாக்கினால் அமுதம் விளைத்தாள்.

## செந்தமிழ் நாடுடையான் செய்த தீர்ப்பு

இராசராசன் தன் பெயராகிய கைதவன் (வஞ்சனை உடைய வன்) என்பதனை நிலை நிறுத்துவான் போல் ஈழ நாட்டுப் பாடினிக்குச் சார்பாய்த் தீர்ப்புச் சொல்ல முந்தும் போது சோம

சுந்தரப் பெருமான் திருவருளால் அகத்து முரண்கெட பாடினிகளைப் பொதுமையால் நோக்கிப் பாணபத்திரன் மனைவி யே வென்றுள் என்று கூறினன். அங்கிருந்த சான்றோர் அத்துணை பேரும் அதனையே வழிமொழிந்து ஆரவாரத்தோடு ஏற்றுக் கொண்டார்கள்.

பாண்டியன் பின்பு இலங்கைப் பாடினியின் கழுத்தில் இவளை அமர்த்துக என்று ஆணையிடவும்; அறிஞர் குழாத்துள் இதுவரை கரந்திருந்த கண்ணுதற் கடவுள் "ஆகா - இது அற்புதம்"- என்று பலருங் கேட்கக் கூவி உடன் மறைந்தார். செங்கண் ஏறுடையார் செயலே இது என அனைவரும் தெளிந்து மகிழ்ந்து போற்றினர்.

வங்கத்தின் மேல் வந்த விறலியின் கழுத்திலிருந்த பாடினி யை இறங்கச் செய்து இசையில் வென்ற அவள் மகிழுமாறு முத்தாரங்களையும், மணிகளையும், துகில் வகைகளையும் கொடுத் தான் தமிழ் மாறன். தோற்றவளுக்கும் வரிசைதந்து மகிழ் வித்தான். தெய்வதக் கோயில் விட்டுத் தங்களில் ஒருவனுக வந்த பொன்னுர்சடைப் புங்கவனுக்குப் பல திருவாபரணங்களை நல்கி வந்தித்து வணங்கினன்.

மன்னவர்கள் வலியெல்லாம் தெய்வத்தின் வலிக்குமுன் நிற்காது. அந்தத் தெய்வங்களின் வலிமையும் அரண் மூன்றை யும் அழித்த முன்னவனும் சிவபெருமான் வலிமுன் நிற்காது - என்பதை இப்பாடினிகளின் நிகழ்ச்சியால் அறிந்தோமென்று பலரும் இந்நிகழ்ச்சியைக் கொண்டாடினர்கள்.

இராசராச பாண்டியனும் மகிழ்வோடு தன்னரண்மனை யடைந்து சுகுணபாண்டியனைப் பெற்றுப் பல காலம் நிம்மதி யோடு அரசோச்சினன்.

(வளரும்)

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

"The temple is kept neat and prompt attention is paid to devotees."

(Sd.) V. V. Raghavan,
Judge, High Court, Madras.

24—9—71.

# இறைவன் - கடவுள் - இயவுள்

வித்துவான்.

ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

" ஈருய்முதல் ஒன்ருய்இரு பெண்ஆண் குணம்மூன்ருய்
மாருமறை நான்காய்வரு பூதம்அவை ஐந்தாய்
ஆருர்சுவை ஏழோசையொடு எட்டுத்திசை தானுய்
வேருய் உடன்ஆனுன் இடம்வீழிம் மிழலையே.

—திருஞானசம்பந்தர்.

தமிழ்மொழி அமிழ்தினும் இனியது. காலத்தால் மூத்தது. கோலத்தால் குளிரிளமைத் திறத்தது. சீலத்தால் சிவநெறி வளர்க்கும் சிறப்பினது. கலைத்திறன் மிக்கது. தமிழ் என்ற பெயரில் வல்லின, மெல்லின, இடையின எழுத்துகட்கு இட மளித்து ஏற்றங்கண்டது. இலக்கிய இலக்கணங்களால் வளம் மிக்கது. இத்தகைய சிறப்புமிக்க இன்றமிழ் மொழி உலகத்தின் முழுமுதலாகஉள்ள பரம்பொருளை, பொருள்வளம்மிக்க, அருள் நலங் கனிந்த மூன்று சொற்களால் அழகொழுக அறிவிக்கின்றது.

அம்மூன்று சொற்களாவன, இறைவன், கடவுள், இயவுள் என் பனவாம். இறு என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது இறை வன் என்றசொல் - இறுத்தல் - அசையும் பொருள் அசையாப் பொருள்களாகிய எல்லாப் பொருள்களிலும் தங்கியிருப்பதால் அப் பரம்பொருளை இறைவன் என்ற சொல்லால் அழைத்துப் போற்றினர். கடவுள் என்ற சொல்லை கட - உள் என்ற இரு சொற்களாகப் பிரிப்பர். கட பகுதி, உள் தொழிற்பெயர் விகுதி; இச்சொல் மனம் வாக்கு முதலிய எல்லாவற்றையும் கடந்தது என்பதைக் காட்டுகிறது. கடந்த பொருளாயினும் உள்ள பொருள் என்பதையும் நிலைநாட்டுகிறது உள் என்ற விகுதி. துன்பமோ டின்பமதெல்லாம் கடந்தவர் காதலில் வாழும் கற்குடி மாமலையாரே " என்ற திருஞானசம்பந்தர் திருவாக்கு இதனைத் தெளிவிக்கும். இயவுள் என்ற சொல், வழியாக உள்ளவன் இறைவன் என்பதை எடுத்துக்காட்டுகிறது. இயவு - வழி; இயவுள், வழியாகவும், வழியில் இயக்கிச் செல்லும் முதல்வ

ஞகவும் உள்ளான் என்பதைத் தெரிவிக்கிறது. "பெரியோ ரேத்தும் பெரும்பெயர் இயவுள் " என்ற திருமுருகாற்றுப்படை அடி இதனை நன்கு அறிவிக்கும்.

இறைவன், கடவுள், இயவுள் என்ற மூன்று சொற்களும் பரம்பொருளாகிய முதல்வன் உயிர்களுடன் ஒன்றாய், வேறாய், உடனாய் இருந்து இவ்வுலகத்தையும் உயிர்களையும் இயக்குகின்றான் என்பதை உணர்த்துகின்றன.

இறைவன் என்றசொல், முதல்வன், எல்லாப்பொருள்களிலும் அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்தபூர்த்தி யாகித் தங்கி இருப்பவன் என்பதை விளக்குவது. உயிர்க ளோடும் உலகத்தோடும் ஒன்றாய்க் கலந்து நிற்பவன் என்பதைத் தெளிவிப்பது. இதற்கு உதாரணம், உடல் உயிர்போல் என்ப தாகும். உடல்வேறு, உயிர்வேறு ஆயினும், உடலினின்றும் உயிர்வேறு காணப்படாது ஒன்றாகவே இருக்கிறது. இதைப் போல் இறைவன்வேறு, உயிர்கள்வேறு ஆயினும் இறைவன் எல்லா உயிர்களிடத்தும் கலப்பினால் ஒன்றாயிருந்து உதவிசெய் கின்றான். இவ்வுதாரணத்தால் இறைவன் உடல் உயிர்போல் கலப்பினால் ஒன்றாயிருக்கிறான் என்பதைத் தெரிகிறோம்.

கடவுள் என்ற சொல் முதல்வன் வேறாயிருந்து உயிர்கட்கு உதவுகின்றான் என்பதைத் தெரிவிக்கிறது. இதற்கு உதாரணம் கண் ஒளியும் சூரிய ஒளியும் போல் என்பதாகும். கண் ஒளி காணும் தன்மையுடையது. சூரியஒளி காட்டும்தன்மைஉடையது. அதைப்போல் உயிர் காணுந்தன்மையுள்ளது. கடவுள் காட்டுந் தன்மை உடையவர். இரண்டும் ஒளியுடைய பொருளாயினும் உயிர்காணும் ஒளியாய் உள்ளது. கடவுள் காட்டும் ஒளியாய் உள்ளார். "கண்ணுதலாய்க் காட்டாக்கால் காண்பார்யார்" என்ற அப்பர் அருள்வாக்கு இதனைத் தெளிவாக்குகிறது.

இயவுள் என்ற சொல், பரம்பொருள் உயிர்க்குயிராய் உடனா யிருந்து உதவுகின்றான் என்பதை விளக்குகிறது. கண் ஒளியும் ஆன்ம போதமும் (உயிர்அறிவு) போல் என்ற உதாரணத்தால் இதனை உணர்த்துவர். கண்ணிற்கு ஒளி இருப்பது உண்மையே ஆயினும் கண்காணும்போது உயிருணர்வும் அதனுடன் சென்று கண்டால்தான் கண் ஒரு பொருளைக்காண இயலும். கண் விழித்தபடியே இருந்தாலும் உயிருணர்வு அதனுடன் தானும் காணாத விடத்துக் கண் ஒன்றையும் காணாது. இதை நாம் நம் அனுபவத்திலும் நன்கு உணரலாம். அதேபோன்று உயிர்

அறிவுடையதே, ஆயினும் அது இயங்கவேண்டுமானல் இயவுளாகிய இறைவன் அதனுடன் இருந்து தானும் இயங்கவேண்டியுள்ளது. இதனை இயவுள் என்றசொல்லால் முன்னேர் மொழிந்துள்ளனர். இயவுள் என்ற சொல்வழியாகவும், அவ்வழியில் உடன் இயங்குவோனுகவும் இருக்கிருன் இறைவன் என்பது இனிது விளங்குகிறது.

இம்மூன்று இனிய சொற்களும் கடவுள் ஒன்ருய், வேருய், உடனுய் உயிர்கட்கு உதவிசெய்கின்ற திறத்தினை விளக்குகின்றன. நம்முடன் ஒன்ருகவும், நமக்கு வேருகவும், நமக்கு உடனுகவும்நாம் வேண்டாமலே நமக்குஎன்றும் உதவிவரும் பெருங் கருணையாளனுகிய இறைவனை, துன்பமோடு இன்பமதெல்லாம் கடந்த கடவுளை, பெரியோரேத்தும் பெரும்பெயர் இயவுளை நாம் வாழ்த்துவதும், வணங்குவதும், வழிபாடியற்றுவதும் நாம் உயர்வதற்காகவே அன்றி, அவன் உயர்வதற்காக அல்ல. இதனை, "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்" என்ற மணிவாசகரின் மணிமொழியாலும், "பொன்னல் பிரயோசனம் பொன்படைத்தாற்குண்டு" என்ற பட்டினத்தடிகளின் பணிமொழியினுலும் பாங்குற உணரலாம்.

அத்தகைய இறைவனைப் பேசாதநாள். அவனைக் காணப் பெருத மனிதப்பிறவி பயன் அற்றது என்கிருர் அப்பர். எண் குணத்தானுகிய இறைவன் தாளை வணங்காத் தலை பயனற்றது என்கிருர் திருவள்ளுவர். ஒளியைப் பற்ருத கண்ணும், ஒலியைப் பற்ருத காதும், சுவையைப் பற்ருத நாவும், நாற்றத்தை நுகராத நாசியும், ஊற்றுணர்வில்லா உடலும் எப்படிப் பயன்அற்றனவாகக் கருதுகிருேமோ அதே போன்று தலை தந்த தலைவனை வணங்காத் தலையும் பயன் அற்றதே என்பதைக் "கோள் இல் பொறி இல் குணம் இலவே, எண்குணத்தான் - தாளை வணங்காத் தலை" என்ற குறளால் அழுத்தமாக அறிவிக்கின்ருர்.

ஆகவே உடல் உயிர்போல் கலப்பினல் ஒன்ருய், (இறைவன்) கண் ஒளியும் சூரிய ஒளியும் போல் பொருள் தன்மையால் வேருய் (கடவுள்) கண் ஒளியும் ஆன்மபோதமும போல்உடனுய் (இயவுள்) உதவும் நம்வாழ்முதலாகிய பரம்பொருளை மனத்தினல் நினைத்து வாயினல் வாழ்த்தி, காயத்தால் (உடலால்) தொழுது உய்வோமாக.

# திருமந்திரம் - குறிப்புரை

திருக்குறள்வேள்,
**திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B, A,**

( மலர் 30. இதழ் 10. பக்கம் 539 இன் தொடர்ச்சி)

219 பாழி அகலும் எரியுந் திரிபோலிட்
டூழி அகலும் உறுவினை நோய்பல
வாழிசெய் தங்கி உதிக்க அவைவிழும்
வீழிசெய் தங்கி வினைசுடு மாமே.

கு - ரை :- பாழி அகல - யோனி குண்டம். எரி - அக்கினி. திரி - தீப்பந்தம். பாழி அகலும் எரியுந் திரிபோலிட்டு என்பது, யோனி குண்டத்துள் உள்ள அக்கினியைத் தீப்பந்தம்போல் மேலெழும்படி செய்தால் என்றபடி. ஊழி - முடிவு. ஊழி அகலும் உறுவினை நோய்பல என்பது, மரணமும், அடைகின்ற வினைகளும், நோய்களும் நீங்கும் என்றபடி. வாழி செய்தங்கி உதிக்க அவை விழும் என்பது, கீழேயுள்ள அக்கினி மேலே நிலைபெற்றால் முன்னர்க் கூறிய மரணம் நோய் வினை ஆகியவை கெடும் என்றபடி. விழிசெய் தங்கி வினைசுடு மாமே என்பது, அவைகளைத் தாங்கியுள்ள வினைகளைச் சுட்டு மேலும் அவை ஏற்படாமல் காக்கும் என்றபடி. வாழ்தல் - வளர்தல். வீழ்தல் - அழிதல்.

" ஸ்திரீயின் இடைப்பிரதேசம் ஓமகுண்டம். யோனியுள் உள்ள ரோமங்கள் தருப்பைப் புல். தோல் - சோமக்கொடி. யோனியின் இரு உதடுகள் அக்கினி. இதை உணர்ந்தவன் வாஜபேய யாகம் செய்தவனாகிறான். எல்லாப் பாபங்களையும் நிவர்த்தி செய்கிறான்." பிரகதாரண்ய உபநிஷத்து நான்காவது பிரமாணம்.

இக்கிரியையால் வினை முதலியன நீங்கும் என்பதாம். 6

220 பெருஞ்செல்வங் கேடென்று முன்னே படைத்த
வருஞ்செல்வம் தந்த தலைவனை நாடும்
வருஞ்செல்வத் தின்பம் வரவிருந் தெண்ணி
அருஞ்செல்வத் தாகுதி வேட்கநின் றாரே.

கு - ரை :- பெருஞ் செல்வங் கேடென்று முன்னே படைத்த என்பது, பொன்னும் மணியும் கேட்டினைத் தரும் என்று முன்னே அருளிய என்றபடி. அருஞ்செல்வம் தந்த தலைவனை நாடும் என்பது, அருமையான ஞானச்செல்வத்தை அளித்த தலைவனாகிய சிவனை நாடுங்கள் என்றபடி. புணர்ச்சியால் அகரம் வகரமாகியது. அழியும்செல்வத்தைநாடாது அழியாச்செல்வத்தை நாடவேண்டும் என்க. வருஞ்செல்வத் தின்பம் வரவிருந் தெண்ணி என்பது, மேலான சிவாக்கினி சிரசின்மேல் உதிப்பதை நினைந்து என்றபடி. வரும் செல்வம் - கீழிருந்து மேல் நோக்கி வரும் செல்வம். அருஞ்செல்வத் தாகுதி வேட்கநின் றாரே என்பது, ஞானச் செல்வத்தை நாடி அக்கினி காரியம் செய்கின்றார்கள் என்றபடி.

சிவாக்கினி விளங்க அக்கினி காரியம் செய்யவேண்டும் என்பதாம். 7

221 ஒண்சுட ரானை உலப்பிலி நாதனை
ஒண்சுட ராகிஎன் னுள்ளத் திருக்கின்ற
கண்சுட ரோன்உல கேழுங் கடந்தஅத்
தண்சுட ரோமத் தலைவனு மாமே.

கு - ரை :- ஒண்சுட ரானை உலப்பிலி நாதனை என்பது, ஒளி வடிவானவனும், அழிவில்லாத தலைவனும் என்றபடி, ஒண்சுடராகி என்னுள்ளத் திருக்கின்ற கண்சுடரோன் என்பது, ஒளிமிக்க சுடராகி எனது உள்ளத்தில் எழுந்தருளிய கண்ணில் ஒளிபோன்றவனும் என்றபடி. உலகேழுங் கடந்த அத்தண் சுடர் என்பது, ஏழு உலகங்களையும் கடந்த அக்குளிர்ந்த சுடராயவனும் ஆகிய சிவன் என்றபடி. சுடர் உள்ளத்திலும் உள்ளது புறத்தேயும் உள்ளது என்று கூறிய இறை இயல்பு அறிக. ஓமத் தலைவனு மாமே என்பது, ஓமத் தலைவனாகிய இயமானனுமாவான் என்றபடி.

சுடர்ப்பொருளாகிய சிவனே ஓமத்துக்குரிய தலைவன் ஆவான் என்பதாம், 8

222 ஓமத்துள் அங்கியின் உள்ளுளன் எம்மிறை
ஈமத்துள் அங்கி இரதங்கொள் வானுளன்
வேமத்துள் அங்கி விளைவு வினைக்கடல்
கோமத்துள் அங்கி குரைகடல் தானே.

கு - ரை :- ஓமத்துள் அங்கியின் உள்ளுளன் எம்மிறை என்பது, உடலின் சகல அக்கினி காரியத்துக்கும் சிவன் மறைந்திருந்து உதவுகிறான் என்றபடி. ஈமம் - சுடுகாடு. ஈமத்துள் அங்கி இரதங்கொள் வானுளன் என்பது, இறந்த பிறகு சாரமாகிய சூக்கும உடலிலும் பொருந்திச் சிவன் விளங்கு வான் என்றபடி. தூல உடலோடு சூக்கும உடலிலும் பொருந்திச் சிவன் விளங்குவான் என்க. வேமம் - நெய்தற் கருவி. வேமத்துள் அங்கி விளைவு வினைக்கடல் என்பது, நெய்யப் பட்ட ஆடை உரம் பெறுவதுபோல வாசனாரூபமான வினைகள் சிக்குண்டு கடல்போல் பெருகி விடுகிறது என்றபடி. பஞ்சு போன்ற பொருள் நெய்யப்பட்டபோது வலிமை பெறுவது போல வாசனாரூபமாக இருந்த வினை வாழும்போது பெருகி வலிமை பெறுகிறது என்க. கோ மத்து - ஆன்மா. கோமத்துள் அங்கி குரைகடல் தானே என்பது, ஆன்மா சிவத்தை நோக்கிச் சிந்தனையைக் கடைவதாலே சப்திக்கின்ற நாத ஓசை உண்டாகி வினை கெடும் என்றபடி.

இறைவன் இவ்வக்கினியில் பொருந்திப் பயன் தருவான் என்பதாம். 9

223 அங்கி நிறுத்தும் அருந்தவர் ஆரணத்
தங்கி இருக்கும் வகையருள் செய்தவர்
எங்கும் நிறுத்தி இளைப்பப் பெரும்பதி
பொங்கி நிறுத்தும் புகழது வாமே.

கு - ரை :- அங்கி நிறுத்தும் அருந்தவர் என்பது, அக்கினியைச் சிரசுக்குச் கொண்டுசெல்லும் திறமுடையவர் என்றபடி. ஆரணத்தங்கி - வைதீகாக்கினி. ஆரணத்தங்கி இருக்கும் வகையருள் செய்தவர் என்பது, வைதீகாக்கினியைக் காருக பத்தினியோடு கூட வளர்த்தவராவர் என்றபடி. பெரும்பதி - பிரமலோகம். எங்கும் நிறுத்தி இளைப்பப் பெரும்பதி என்பது, மறுமையிலே பிரமலோகம் முதலியவற்றில் தங்கி இளைப்பாறவும் என்றபடி. பொங்கி நிறுத்தும் புகழது வாமே என்பது. இம்மையிலே மேல் ஓங்குகின்ற புகழும் உண்டாகும் என்றபடி.

அக்கினி காரியம் செய்பவர் இம்மை இன்பத்தோடு மறுமைப் பேறும் பெறுவர் என்பதாம். 10

(தொடரும்)

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்நாகரம்,

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 30, இதழ் 10, பக்கம் 557 இன் தொடர்ச்சி)

சிவராத்திரி பூஜா :

शिवपूजां प्रवक्ष्यामि नित्यपूजावसानके ।
चतुर्याम प्रकुर्वीत पुण्याहं वाचयेत्ततः ॥
अष्टोत्तर शतं चैव स्नपनं पूर्वयामके ।
एकाशीति घटं स्थाप्य द्वियामे पूजयेच्छिवम ॥
घटंचैकोन पञ्चाशत स्नपनं च त्रियामके ।
पञ्चविंशत्घटान् स्थाप्य चतुर्यामे प्रपूजयेत् ॥

— कारणागमम्

நித்யபூஜையான சாயரக்ஷை பூஜை செய்துமுடித்துப் பின்னர் சிவராத்திரி பூஜையை ஆரம்பிக்கவேண்டும். முதல் கால பூஜைக்கு 108 கலச ஸ்னபனமும், இரண்டாவது கால பூஜைக்கு 81 கலச ஸ்னபனமும், மூன்ருவது கால பூஜைக்கு 49 கலச ஸ்னபனமும், நான்காவது கால பூஜைக்கு 25 கலச ஸ்னபனமும் வைத்து அபிஷேகம் செய்யவேண்டும்

பூஜாரம்பத்தில் விக்னேச்வர பூஜை செய்து சௌரபூஜை செய்துகொண்டு சாயங்கால பூஜா முடிவில் சிவராத்திரிபூஜை ஆரம்பம் செய்யவேண்டும். —காரணம்.

சதுர்த்தசிக்கு முதல்நாள் ஆலயம் பூராவும் திருவலகிட்டு ஜலம் விட்டு அலம்பி தோரணம் தர்ப்பமாலை முதலிய கட்ட வேண்டும். — சித்ததந்திரம்.

चतुस्सन्ध्यर्चनांतेतु अर्धयामार्चनं चरेत् ।
अर्धयामे विशेषोऽस्ति शिवे स्नानं विना चरेत् ॥

— चिन्त्यम

நான்காம் காலம் பூஜை முடிவில் அர்த்தயாமம் செய்ய வேண்டும். அர்த்தயாமத்திற்கு அபிஷேகம் இன்றி அஷ்ட புஷ்பம் சாத்தி பூஜை செய்யவேண்டும்.

— சிந்தியாகமம்.

இரவு பகல் 60 நாழிகையில் மாலை தொடங்கி இரவு முடிய 31¼ நாழிகைக்குள் ப்ரதோஷ பூஜை, சாயங்கால பூஜை, சிவராத்திரி நான்குகால பூஜை அர்த்தயாம பூஜை பாதுகாராதனம், க்ஷேத்ரபால பூஜை முதலியவைகள் செய்ய நாழிகைகளைக் கணக்கிட்டுச் செய்யவேண்டும்.

அதாவது, த்ரயோதசியும் சதுர்த்தசியும் கூடியதாக வந்தால் ப்ரதோஷகாலபூஜை செய்யவேண்டியதன்பொருட்டு

| | | |
|---|---|---|
| மாலையில் | நாழிகை | 1 வ |
| சாயரக்ஷா பூஜைக்கு | ,, | 3ஜ |
| நான்கு காலம் சிவராத்திரி பூஜைக்குக் காலம் 1க்கு 5 நாழிகை வீதம் காலம் 4க்கு | ,, | 20 |
| அர்த்தயாமபூஜை தீபாராதனைக்கு | ,, | 1 வ |
| பாதுகாராதனம், போகசக்திபூஜை | ,, | 1 வ |
| க்ஷேத்ரபாலபூஜை | ,, | 1 ௨ |
| கவாடபந்தனம் (திருக்காப்பிடுதல்) | ,, | 0 வ |
| உஷ:காலபூஜைக்கு | ,, | 2 வ |
| | ஆக நாழிகை | 31 வ |

இந்த முறைப்படி பூஜை செய்யவேண்டும் — சிந்தியாகமம்

நான்குகால பூஜைகளிலும் வில்வம் அர்ச்சிக்கவேண்டும். ஒவ்வொரு யாம பூஜையிலும் சண்டேசனுக்குப் பூஜை செய்ய வேண்டும். த்வாரபூஜை நித்யோத்ஸவம், பலி, அக்னிகாரியம் இவைகளை நீக்கவேண்டும். நான்காவது காலம் முடித்து அர்த்தயாமம் செய்யவேண்டும். அர்த்தயாம பூஜையில் சுவாமிக்கு அபிஷேகம் செய்யக்கூடாது. அஷ்டபுஷ்பம் சாத்தி தூபதீப நைவேத்யம் செய்து, பாதுகாராதனம், க்ஷேத்ரபால பூஜை செய்து கதவு சாத்தித் திறந்து நித்யபூஜை ஆரம்பம் செய்யவேண்டும். சிவராத்திரி பூஜையால் பாபம் நீங்கும் உலகம் செழிக்கும்

— காரணாகமம்.

பங்குனிமாத பௌர்ணமியில் ததியால் (தயிர்) பூஜை செய்யவேண்டும்.

சித்திரை மாதத்தில் தமனத்தினுல் (மருக்கொழுந்து) பூஜை செய்யவேண்டும். சித்திரா நக்ஷத்திரத்துடன் பௌர்ணமி கூடிய நாளில் இந்த தமன பூஜையைச் செய்ய வேண்டும். — காரணம்.

முற்காலத்தில் பரமேச்வானுடைய கோபத்திலிருந்து தமனர் என்னும் பெயரையுடைய பைரவர் உற்பத்தியாயினர். அவரால் தேவர்கள் அசுரர் முதலியவர்கள் அடக்கப்பட்டனர். அதனுல் சந்தோஷமடைந்தாராயினும் பரமேச்வரன் தேவர்களுக்கு அபயம் கொடுக்க எண்ணி அந்த பைரவரை நோக்கி நீ பூமியில் மருக்கொழுந்து என்னும் செடியாகத் தோன்றக் கடவாய்; உன்னுடைய தளிர் முதலியவற்ருல் என்னை பூஜிப்பவர்கள் மேலான ஸ்தானத்தை அடைவார்கள். எவர்கள் சித்திராபூர்ணமியில் எனக்குத் தமனத்தினுல் பூஜை செய்யவில்லையோ அவர்கள் சித்திரை மாதத்தில் அவர்கள் செய்த புண்ய பலன் தத்தமாகும். — சோமசம்புபத்ததி.

வைகாசிமாதம் :- சந்தனம் சாத்திப் பூஜிக்கவேண்டும். ஆனி மாதத்தில் பழங்களையும், ஆடிமாதத்தில் க்ஷீரபூஜையுஞ் செய்யவேண்டும்.

பவித்ரோத்ஸவம் :- ஆதிதைவிகம், ஆதிபௌதிகம், ஆத்தியான்மிகம் என்னும் மூவகையான துக்கநிவிருத்தியின் பொருட்டுப் பவித்ரம் சாத்துவதாம். பூஜைகளின் குறைவை நீக்கிப் பரிசுத்தம் செய்வதால் பவித்ரம் எனப் பெயர்பெற்றது. ஒரு வருஷத்தில் நாடோறும் செய்யும் பூசையில் மந்திர லோபம், திரவியலோபம், கிரியா லோபம் முதலியவைகளினுலும் மோகத்தினுலும் அக்ஞானத்தினுலும் இராச சோர பயம் முதலியவற்றினுலும் நேர்ந்த குறையைப் பூர்த்திசெய்யும் பொருட்டுப் பவித்ரம் ஸமர்ப்பணம் செய்யவேண்டும். இந்த பவித்ரம் நாடோறும் செய்வது தைவசிகம் என்றும், வருஷம் தோறும் செய்வது வார்ஷிகம் என்றும் இருவகையாம். நாடோறும், புஷ்பம் தர்ப்பை இவைகளைக் கொண்டும் வார்ஷிகத்தில் பட்டு நூல்களைக்கொண்டும் பவித்ர சமர்ப்பணம் செய்ய வேண்டும். விதிமுறை தவறிச் செய்ததற்குப் பிராயச்சித்தம்

செய்யாவிடில் அதன் சித்தி கிடைக்காததுடன் வியாதியை அடைகிருன், அதாவது ஆசாரியன் வியாதியை அடைகிருன். புத்திரன் முக்திப்பேறு பெருன். ஆதலால் வாக்கு, மனம், சரீரம் இவைகளால் செய்யப்படும் பூஜாவழுக்களைப் போக்க வேண்டியதன் பொருட்டுப் பவித்ரதானம் செய்யவேண்டும்.

— காமிகாகமம்.

ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்கள் முறையே உத்தமம், மத்தியமம், கனீயசம் என்று கூறப்படுகிறது. இல்லாவிடில் ஐப்பசி, கார்த்திகை மாதமும் செய்யக்கூடியவை. இதில் சதுர்த்தசி, அஷ்டமி இதனுள் ஏதாவதொன்றில் பவித்ர தானம் செய்யவேண்டும்.

कृत्तिकादीपतः पश्चात् नाचरेत्तु पवित्रकम् ।

— कामिकम्

கார்த்திகை தீபத்திற்குப் பிறகு பவித்ராரோபணம் செய்யக் கூடாது,

— காமிகாகமம்.

இந்த பவித்ரோத்ஸவம் செய்யும் ஆசாரியர் கர்த்தா இவர்களுக்குப் பொருத்தமானதாய், சுக்லபக்ஷமாய் குரு சுக்ர மூடமில்லாததாய் இருக்கும் மாதத்தில் செய்யவேண்டும். ஆன்மார்த்த விஷயத்தில் முமுக்ஷுவாஞல் சுக்லபக்ஷம் கிருஷ்ணபக்ஷம் இரண்டிலும் செய்யலாம்.

— காமிகாகமம்.

பட்டுநூல், பஞ்சுநூல் முதலிய நூலை ஒன்பது மடியலாக மடித்து, அதை ஒன்பது சரமாகச் செய்து சுத்தஜலம் விட்டு அலம்பி வாசனைப் பொருள்கள் சேர்க்கப்பட்ட சந்தனத்திஞல் பூசி பவித்ராரோபணத்தின் பொருட்டு உபயோகிக்க வேண்டும்.

ஒன்பது இழை, பதினறு இழை, இருபது இழை உள்ளது அதம பவித்ரம். இருபத்தைந்து இழை முப்பத்திரண்டு இழை முப்பத்து ஆறு இழை உள்ளது மத்யமம். ஐம்பது இழை, எழுபது இழை, தொண்ணூறு இழை உள்ளது உத்தமம் என்று இவ்வாறு பவித்ரம் ஒன்பது பேதமுடையது.

— அசிந்தியவிச்வசாதாக்யம்.

( தொடரும் )

# இருவகைப் புணர்ச்சியில் : : எழுத்துப்பேறும் சாரியையும்*

திரு. டாக்டர். சோ. ந. கந்தசாமி M A., M. Litt. Ph.D.

மொழிவாழ்வின் ஒழுங்கினைப் பேணுதல் இலக்கணத்தின் நோக்கம். பிழையின்றிப் பேசுதலின், பிழையின்றி எழுதுதல் பெரிதும் தேவை. எழுத்திலக்கணத்தின் பெரும்பகுதி புணர்ச்சி விதிகளைப் புகட்டுதல் காண்க. தொல்காப்பியத்தில் 6-9 இயலும் நன்னூலில் 3-5 இயலும் புணர்ச்சி இலக்கணம் புகறலின், எழுத்தாளர் எந்த அளவு சந்திப்பிழையின்றிச் சிந்தித்து எழுதுதல் வேண்டும் என்பது மலையிலக்கு.

புணர்ச்சி இலக்கணம் - பகுப்புமுறை:

தொல்காப்பியர் புணர்ச்சி இலக்கணத்தினை மூவகையாகப் பகுத்து விளக்கினர்.

1. முதல்வகை - எழுத்துவகையால் நான்காவன :

அ. உயிர்முன் உயிர் ஆ. உயிர்முன் மெய்
இ மெய்முன் உயிர் ஈ. மெய்முன் மெய்

(தொல் - உயிர். 107)

2. இரண்டாம்வகை - சொல்வகையால் நான்காவன :

அ. பெயரும் பெயரும் புணர்தல். ஆ. பெயரும் வினையும் புணர்தல். இ. வினையும் பெயரும் புணர்தல் ஈ. வினையும் வினையும் புணர்தல். (தொல் உயிர் 108).

3 மூன்றும்வகை - தொடர்வகையால் இரண்டாவன :

அ. வேற்றுமைப் புணர்ச்சி. ஆ. அல்வழிப் புணர்ச்சி (தொல் உயிர் 112) சொல்வகையால் புணருங்கால் மெய்பிறிதா

---

* 10—4—71ல் பேராசிரியர், திருமுறைச்செல்வர் க. வெள்ளைவாரணனுர் அவர்கள் தலைமையில் அண்ணுமலைப் பல்கலைக்கழக ஆசிரியர் கருத்தரங்கில் படிக்கப்பெற்ற ஆய்வுக்கட்டுரை,

தல், மிகுதல், குன்றல், இயல்பு என்ற நானிலை பெறுதலும் (தொல் உயிர் 103, 109 ; நன் உயிர் 158, 154), தொடர்வகை யால் புணருங்கால் எழுத்துப்பேறு, சாரியை என்பன உபகாரப் படுதலும் (தொல் உயிர் 112) தொல் காப்பியர் வரையறுக்கும் புணரியற் சட்டமாம்.

வேற்றுமைப் புணர்ச்சி :-

இனி, வேற்றுமைப் புணர்ச்சி (1) உருபு புணர்ச்சி, (2) பொருட்புணர்ச்சி என இரண்டாகும். தொல்காப்பியர்,

'' வேற்றுமை உருபு நிலைபெறு வழியும்
தோற்றம் வேண்டாத் தொகுதிக்கண்ணும் ''
(தொல் உயிர் 132) என்றும்,

நன்னுலார், ''பதமுன்......பதமும், உருபும் '' (நன்உருபு 243) என்றும் இயம்புதல் காண்க. ஐம்முதல் கண்ஈருக அறுவகை உருபுகளுடன் நிலைமொழியாய் நின்ற பெயர் புணர்தல் உருபு புணர்ச்சியாம். (தொல் 113; நன் 152). உருபு மறைந்து நிற்கும் வேற்றுமைத் தொகைப் புணர்ச்சி பொருட்புணர்ச்சியாம்.

அல்வழிப்புணர்ச்சி :-

அல்வழிப்புணர்ச்சி இத்துணை எனத் தொல்காப்பியம் தொகுத்துரைக்கவில்லை. 'வேற்றுமை அல்வழிப் புணர்மொழி யாலும்' (112), ' அல்வழி ' (398) 'அல்லது' (321) எனப் பொதுவகையாற் கூறிற்று. இளம்பூரணர் முதலியோர் அல் வழிப் புணர்ச்சிக்கண் வருவன இவையென வகுத்துரைத் தனர் :–

இளம்பூரணர் :-

1. எழுவாய்
2. விளி
3. உவமத்தொகை
4. உம்மைத்தொகை
5. (1) பண்புத்தொகை. (2) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
6. முற்றுவினை

7. பெயரெச்சம்
8. வினையெச்சம்
9 இடைச்சொல்
10. உரிச்சொல்.

—இளம்பூரணர் உரை பக்கம் 41

நன்னூலார் :-

1. வினைத்தொகை
2. பண்புத்தொகை
3 உவமைத்தொகை
4. உம்மைத்தொமை
5. அன்மொழித்தொகை
6. எழுவாய்
7, விளி
8. பெயரெச்சம்
9. வினையெச்சம்
10. தெரிநிலைவினைமுற்று
11. குறிப்புவினைமுற்று
12. இடைச்சொல்
13. உரிச்சொல்
14. அடுக்குத்தொடர்.

—நன். உயிர். 152

நச்சினார்க்கினியர் :-

1. எழுவாய்
2. விளி
3. முற்றுவினை
; பெயரெச்சம்
5. வினை யெச்சம்
6: உவமத்தொகை
7. உம்மைத்தொகை
8. இருபெயரொட்டுப் பண்புத்தொகை
9. இடைச்சொல்
10. உரிச்சொல்
11. அன்மொழித்தொகை
12. பண்புத்தொகை
13. வினைத்தொகை.

—நச்சி. உரை பக்கம் 75.

அல்வழியில் வரும் தொடர்களை அறுதியிடுதலில், இளம்பூரணர்க்குப்பின் போந்த நன்னூலார் சில மிகுதியாகக் கோடல் இயல்பே. நச்சினார்க்கினியர் அடுக்குத்தொடரை விடுத்தனர். எனின், தொல்காப்பிய நூற்பாக்களைத் துருவி நோக்கின், ஆசிரியர் கருதிய அல்வழித் தொடர்கள் யாவை என்பது போதரும். அவை யாவன :-

தொல் – எழுத்து

1. எழுவாய் :

144 147 148 149 153 155 158 160 163 203 221 224 249 254 257 258 264 273 274 289 295 296 297 298 306 308 309 314 321 322 323 326 237 328 330 345 353 361 368 369 370 371 373 376 379 382 398 399 400 403 408 409 410 423 425 426.

2. விளி :

151 152 211 224 265

3. உம்மைத்தொகை :-

110 164 165 169 223 239 240 317 318 433 434 471 473 475.

4. இருபெயரொட்டுப் பண்புத்தொகை :-

315 319 389 390 – 394 425 435 - 471, 474 476 - 480.

5. வினைமுற்று :-

அ. தன்தொழில் உரைக்கும் வினாவின் கிளவி, 224
ஆ. ஏவல் கண்ணிய வியங்கோள், 210, 211 (?)
இ. செய்ம்மன என்னும் தொழிலிறு சொல், 210
ஈ. வினைக்குறிப்பு 210, 372; 425, 430
உ. முன்னிலை வினைச்சொல் 265. 272
ஊ. படர்க்கை வினைமுற்று 425.

(தொடரும்)

# ஏழாம் திருமுறையில் : : சாத்திர நோக்கு

பேராசிரியர், திரு. கு. சுந்தரமூர்த்தி பி. ஏ.,
திருப்பனந்தாள்.

சாத்திரம் என்றவுடனேயே ஏதோ வயது முதிர்ந்தவர்களால் மட்டுமே அதுவும் வீடுபேறு அடையும் விருப்பமுடையவர்களுக்கு மட்டுமே உரியதாக எண்ணும் உணர்வு எப்படியோ பிறந்து விட்டது. ஆனால் சாத்திரங்கள் வாழவேண்டுமென்று விரும்பும் இளைஞர் உலகுக்கும் இம்மைப்பயன் ஒன்றுமே போதும் என்பவர்கட்கும் கூட வழிகாட்ட வல்லதாகும். சாத்திர நூல்கள் தொகையாக உருப்பெற்றது இடைக்காலத்தே என்றாலும் அதில் கூறப்பட்டுள்ள உண்மைகளும் அடிப்படை அமைப்புக்களும் சங்க காலம் தொட்டே நின்று நிலவி வருவனவாகும். சாத்திரத்தில் கூறப்பெறும் உண்மைகள் மூன்று. அவை இறை, உயிர், வினையென்பன. இவற்றைப் பதி, பசு, பாசம் என்பர்.

1 கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.

2 வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெருக.

"நீல மணிமிடற்று ஒருவன்போல மன்னுக பெரும! என வருவனவற்றால் இறையுண்மை வலியுறுத்தப்பட்டமை தெளியலாம்.

3 'ஒன்றே வேறே யென்றிரு பால்வயின்
ஒன்றி யுயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப
மிக்கோ னாயினுங் கடிவரை யின்றே'.

---

1 தொல் புறம் - 33.
2 தொல். செய்யுளியல் - 110,
3 தொல். களவியல் - 2.

'மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தனம்'

'தீதும் நன்றும் பிறர்தர வாரா'

4 'வகுத்தான் வகுத்த வகையல்லால்.'

என வருவனவற்றால் வினையுண்மை வலியுறுத்தப்பட்டமை தெளியலாம். 'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப' என்பதனால் வழிபடுதற்கும், பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து விளங்குதற்கும் உரிமையுடைய உயிர் உண்மை தெளியப்படும். இவ்வாற்றான் மிகத் தொன்மையான காலத்திலிருந்தே பண்டைச் சான்றோர் இம் முப்பொருள் உண்மையை உணர்ந்து தெளிந்திருந்தனர் என்பது புலப்படும்.

சங்க காலத்தொடு ஒத்தும் அதையடுத்தும் எழுந்த திருமுறைகள் இம் முப்பொருள் உண்மையை இன்னும் சற்று விரிவாக எடுத்துரைக்கத் தலைப்பட்டன. எள்ளினின்று எண்ணெய் எடுப்பதுபோல திருமுறைகள் ஆகமங்கள் ஆகியவற்றினின்றும் தோன்றியவையே ஞானசாத்திரங்களாகும்.

சாத்திரமும் தோத்திரமும் ஆக விளங்குபவன் இறைவன் அப் பெருமானை அடைவிக்கும் திருமுறைகளும் அவ்விரண்டிற்கும் இலக்காக இருப்பதில் வியப்பில்லை. ஏழாந் திருமுறையாதலின் ஏழு குறிப்புக்களைக் கூற விரும்புகின்றேன். திருவருள் முன்னிற்க ஏழாந் திருமுறையை அருளியவர் சுந்தரர். இவர்தம் வரலாற்றில் சில அருட்செயல்களை எடுத்துரைக்கும் சாத்திரப் பாடல்கள் உள. இவரருளிய திருமுறையில் சாத்திர நோக்கமைய அமைந்த பாடல்கள் பல. இவற்றை முறையே வரலாற்றில் சாத்திர நோக்கு, திருமுறையில் சாத்திர நோக்கு எனப் பகுத்துப் பேசுவது முறையாகும்.

(தொடரும்)

---

1 புறநானூறு - 192.
2 திருக்குறள் - ஊழ்.

# செய்திகள்

## தருமையாதீனத்தில்
## தமிழ் அருச்சனை மறுபயிற்சி

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களது திருவுளக்குறிப்பின் வண்ணம் திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன அருளாட்சியிலுள்ள இருபத்தேழு திருக்கோயில்களிலும் திருமேனி தீண்டி அபிஷேக ஆராதனைகள் அருச்சனைகள் முதலியவற்றைப் புரிந்து வரும் சிவாச்சாரியார்களுக்கு, தமிழ் அருச்சனை மறுபயிற்சி 11—8—71 அன்று காலை 10-30க்குத் தொடங்கி அளிக்கப்பட்டது. தருமையாதீன வேதசிவாகம பாடசாலைத் தலைமையாசிரியர், சிவஸ்ரீ. S. சுவாமிநாதசிவாசாரியார் அவர்களும், தருமையாதீனத் தேவார பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. R. வேலாயுத ஓதுவார் அவர்களும் சிவாசாரியர்களுக்குத் தமிழ்த் திருமுறை அருச்சனை மறுபயிற்சி அளித்தனர். ஆதீனத் திருக்கோயில்களில் பணிபுரியும் சிவாசாரியர்கள் தமிழ்த் திருமுறை அருச்சனைப் பயிற்சி பெற்றனர்.

## ஸ்ரீ துர்க்காம்பிகை திருக்கோயிலில்
## சதசண்டியக்ஞ விழா

தருமையாதீனத்தில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளி அருள் வழங்கும் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி திருக்கோயிலில் நவராத்திரி விழா 20—9—71 திங்கட்கிழமை முதல் 29—9—71 புதன்கிழமை முடிய உள்ள நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நவராத்திரி நாட்களில் ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், லக்ஷார்ச்சனையும் ஸ்ரீ வித்யா சக்கரமாகிய மேருவிற்கு சகஸ்ரநாமார்ச்சனையும் காலை மாலை இருவேளைகளிலும் 21 ஆவது சதசண்டியக்ஞமும் நடைபெற்றன

19—9—71 ஞாயிறன்று காலை கணபதி ஹோமமும். யஜமான அனுக்ஞை தேவி அனுக்ஞை விக்நேஸ்வரபூஜை, அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம் முதலியனவும், 20—9—71 திங்களன்று காலை கடஸ்தாபனம் சண்டியக்ஞ பூஜாரம்பம் முதலியனவும்,

25—9—71 சனிக்கிழமையன்று, மாலை வில்வவிருக்ஷாபிமந்த்ரணமும், 26—9—71 ஞாயிற்றுக்கிழமை நவபத்திரிகாக்ரஹணமும், 27—9—71 திங்கட்கிழமை அஷ்டாதச ஆயுதமண்டல பூஜையும், 28—9—71 செவ்வாய்க்கிழமை காலை சப்தசதிஹோமம், சோபனத் திரவியசமர்ப்பணம், வசோர்த்தாரை, மகாபூர்ணாகுதி தீபாராதனை, மாலையில் யக்ஞாங்க தீபாராதனை இரவு யோகினி மண்டல பூஜை முதலியனவும், 29—9—71 புதன்கிழமை ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு சப்தசதியக்ஞ கலசாபிஷேகம் முதலியவற்றுடன் சதசண்டியக்ஞமும் பத்தாவதுகோடி அருச்சனையில் ஒன்பதாவது லக்ஷார்ச்சனையும், நிறைவுற்றது இந்நாட்களில் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்காதேவி சந்நிதியில் சுவாசினீகுமாரிவடுபூஜை. சதுர்வேத பாராயணம், துர்க்காசூக்த பாராயணம், திருமுறைப்பாராயணம், அபிராமி அந்தாதி பாராயணம், முதலியனவும் நடைபெற்றன. நாள்தோறும் காலை மாலை இருவேளைகளிலும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். அன்பர்கள் பலர் திராளாகவந்து வழிபட்டுப் பிரசாதம் பெற்றுமகிழ்ந்தனர். 29—9—71 அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகா சந்நிதானம் அவர்கள் அன்பர்களுக்கு ஸ்ரீ துர்க்காம்பிகை மகாப்பிரசாதம் வழங்கியருளினார்கள்.

### தருமையாதீனம்

## கல்விநிலையங்களின் கலைமகள் விழா

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்தின் அருளாதரவில் தழைத்துவரும் கல்விநிலையங்களின் சார்பாக 20—9—71 முதல், 29—9—71 முடிய கலைமகள் விழா திருநெறியத் தெய்வத் தமிழ் மன்றத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. பல்வேறு கலைத்துறைகள் பற்றியும், அருள் இலக்கியங்கள் பற்றியும் ஆன்றோர் பலரும், ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்களும் உரை நிகழ்த்தினர். ஆதீனக் கல்வி நிலைய மாணவ - மாணவியரும் பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டு பயன்பெற்றனர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப் பள்ளி, உயர்பள்ளி மாணவ - மாணவியர்களால் நாள்தொறும் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப் பெற்றன.

20—9—71 திங்கட்கிழமை தொடங்கிய கலைமகள்விழா முதல் நாள் நிகழ்ச்சியில் மாயூரம் தேசிய உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்கள் வித்துவான். திரு. ஆ. இராமபத்திரன் பி. ஏ., அவர்களும், புலவர். திரு. கா. கு. நடராசன் எம். ஏ., அவர்களும் முறையே தெய்வத்தமிழ், திருக்குறளில் உவமைநயம் என்ற தலைப்புக்களில் சிறப்புரையாற்றினர்.

**21—9—71** செவ்வாய்க்கிழமை மாயூரம் நகராட்சி உயர்பள்ளித் தமிழாசிரியர் புலவர். திரு. சா. முத்துக்கிருட்டினன் அவர்கள் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் என்ற பொருளில் உரைவிளக்கம் செய்தார்.

22—9—71 புதன்கிழமை மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. அ. கலியபெருமாள், எம். ஏ., அவர்கள் கம்பன்கலை என்ற தலைப்பிலும்; தாவர இயல் விரிவுரையாளர் திரு. தி. சிவப்பிரகாசம் எம். ஏ., அவர்கள் தமிழில் தாவரவியல் என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினர்.

23—9—71 வியாழக்கிழமை மாயூரம் அ வ. அ. கல்லூரி, பௌதிக விரிவுரையாளர். திரு. கா. வெ. சுப்பிரமணியம், பி. எஸ்சி., (ஆனர்ஸ்) அவர்கள் 'தமிழில் பௌதிகம்' என்ற தலைப்பிலும், ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை வித்துவான் திருமதி. ப. நீலா அவர்கள் காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ் என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினர். ஆதீனப் பல்கலைக்கல்லூரி நான்காமாண்டு மாணவர்கள், எஸ். பாலுசாமி, எஸ். வைத்தியநாதன் இருவரும் முறையே திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் என்ற தலைப்புக்களில் சிறக்கப்பேசினர்.

24—9—71 வெள்ளிக்கிழமை ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர். புலவர். திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள் அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ் என்ற பொருள்பற்றிப் பேசினர். பல்கலைக் கல்லூரி நான்காமாண்டு மாணவர்கள் எம். வைத்தியலிங்கம், ஏ. ஜெயவேல் இருவரும் முறையே மாணிக்கவாசகர், சுந்தரர் என்ற பொருள் வழிநின்று சிறக்கப் பேசினர்.

25—9—71 சனிக்கிழமை மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. அ. விசுவநாதன், எம். ஏ., அவர்கள் கலையும் கற்பனையும் என்ற பொருளிலும், மாயூரம் தேசிய உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான். திரு. எம். சுந்தரேசம் பிள்ளை அவர்கள், 'காரைக்காலம்மையார்' என்ற பொருளிலும் சிறப்புரையாற்றினர். பல்கலைக் கல்லூரி நான்காமாண்டு மாணவர்கள் ஜி. மருதவாணன், ஆர். கலியபெருமாள் இருவரும் முறையே அப்பூதியடிகள், மெய்ப்பொருள் நாயனர் என்ற தலைப்புக்களில் சிறக்கப் பேசினர்.

**26—9—71** ஞாயிற்றுக்கிழமை, தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், சிரோமணி, வித்துவான். திரு.

வி. சபேசன் அவர்கள் 'பாரதி' என்ற பொருளில் சிறப்புரை ஆற்றினர். பல்கலைக் கல்லூரி நான்காமாண்டு மாணவர்கள் ஆர். வி. ஆப்ரகாம்லிங்கன், கே. பாலகங்காதரன் இருவரும் முறையே சிறுத்தொண்டர், கண்ணப்பர் என்ற பொருள்பற்றிப் பெரியபுராண வழிநின்று உரையாற்றினர்.

27—9—71 திங்கட்கிழமை மாயூரம், அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் வித்துவான். திரு. சொ. சிங்கார வேலன் எம். ஏ., (டிப்-மொழியியல்) அவர்கள் 'சகலகலாவல்லி மாலை' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினர். அடுத்து, ஆதீனப் பல்கலைக்கல்லூரிப் பொறுப்புமுதல்வர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் 'மீனட்சியம்மைகுறம்' என்பது பற்றி விளக்கவுரை நிகழ்த்தினர். பல்கலைக்கல்லூரி நான்கா மாண்டு மாணவர்கள் வி. கருணநிதி, ஆர். நடராசன் இருவரும் முறையே இளையான்குடிமாறனர், திருமூலதேவ நாயனர் என்ற பொருள்பற்றிச் சிறக்கப் பேசினர்.

28—9—71 செவ்வாய்க்கிழமை தருமையாதீனம் ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான். திரு. வே. கண்ணப்பன் அவர்கள் 'குமரகுருபரர்' என்ற தலைப்பில் உரை யாற்றினர். பல்கலைக்கல்லூரி நான்காமாண்டு மாணவர்கள் எஸ். கிருஷ்ணமூர்த்தி 'எறிபத்தர்' என்ற தலைப்பிலும், நடரா சன் 'திருநீலகண்டர்' என்ற தலைப்பிலும், எம். பாண்டுரங்கன் 'ஏனதிநாதர்' என்ற தலைப்பிலும், சி. தாண்டவமூர்த்தி 'பூச லார் நாயனர்' என்ற தலைப்பிலும் சிறக்கப் பேசினர்.

29—9—71 புதன்கிழமை பத்தாம்நாள் தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. விவேகானந்தம் பி. ஏ., பி. இடி. அவர்கள் 'இராமகிருஷ்ணர்' என்ற தலைப்பிலும், ஆனந்ததாண்டவபுரம் திரு. இராமதாச ஐயர் அவர்கள் 'தேவிமான்மியம்' என்ற தலைப்பிலும், தருமை யாதீன வேத சிவாகம பாடசாலைத் தலைமையாசிரியர் சிவஸ்ரீ. சுவாமிநாதசிவாசாரியார் 'காளிதாசன்' என்ற தலைப்பிலும் உரை நிகழ்த்த கலைமகள்விழா நிகழ்ச்சிகள் யாவும் இனிதே நிறைவுற்றன.

நாள்தோறும் விழாத் தொடக்கத்தின்போது ஆதீனத் தேவாரப் பாடசாலை மாணவர்களால் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தப்பட்டது. பின்னர் ஸ்ரீமத். திருநாவுக்கரசுத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கடவுள் வணக்கம் பாடிய பின்னர் நிகழ்ச்சி கள் தொடங்கி நடைபெற்றன.

### தருமையாதீனம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளியில்

தருமை ஆதீனக் கல்வி நிலையங்களில் ஒன்றான ஸ்ரீகுருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளியிலிருந்து நாற்பத்தாறு மாணவ மாணவிகளும், ஐந்து ஆசிரியர்களும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களின் ஆசியுடன் 15—9—71 — 16—9—71 ஆகிய இருநாட்களில் கல்விப் பயணமாகத் தனிப் பேருந்து வண்டிமூலம், சென்னை, மகாபலிபுரம் ஆகிய இடங்களுக்குச் சென்று கண்டுவந்தனர். சென்னை சமயப் பிரசார நிலையத்தில் வித்துவான். ஸ்ரீமத், சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் குழந்தைகளுக்கு வேண்டிய பற்பல உதவிகளைச் செய்துதவினார்கள். தலைமை ஆசிரியர் திரு. த. விவேகானந்தம் B. A. B. Ed, அவர்கள் சுற்றுலாவிற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தார்கள்.

### ஆதீனத்திருக்கோயில்களில்

## நவராத்திரி விழாச் சொற்பொழிவுகள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில் நவராத்திரி விழாவை முன்னிட்டு ஸ்ரீ அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சொற்பொழிவு முதலிய நிகழ்ச்சிகளும் சிறப்புற நிகழ்ந்தன.

**சீகாழி :**

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ திருநிலைநாயகிக்கு நவராத்திரி விழாவைக் குறித்து விசேஷ அபிஷேக ஆராதனைகளும் மாலை 6 மணிக்கு சமயப்பிரசார மண்டபத்தில் சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன. 24—9—71 அன்று வித்துவான். திரு. கு. சுந்தரமூர்த்தி B. A. அவர்கள் “ மீனாக்ஷியம்மை குறம் ” என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றிய பின்னர், திரு. சண்முகசுந்தரம் குழுவினரின் வீணை இன்னிசை நடைபெற்றது. 27—9—71 அன்று புலவர். திரு. கா. கு. நடராசன் M. A. அவர்கள் “ அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் ” என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றிய பின்னர், தஞ்சை திருமதி. திலகவதி அவர்களால் காரைக்காலம்மையார் வரலாறு இன்னிசைக் கதையாக நிகழ்த்தப்பட்டது.

வேளூரில் :

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் நவராத்திரி விழாவை முன்னிட்டு ஸ்ரீ தையல்நாயகி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் லக்ஷார்ச்சனையும் மாலை 6 மணிக்கு சமயப்பிரசார மண்டபத்தில் 24—9—71 அன்று வித்துவான். திருமதி. ப. நீலா அவர்கள் திருவெண்ணீற்று மையம்மை பிள்ளைத்தமிழ் என்ற தலைப்பிலும், 25—9—71 அன்று திரு. அ. கலியபெருமாள் M A. அவர்கள் மீனுக்ஷியம்மை பிள்ளைத்தமிழ் என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினுர்கள்.

திருக்கடவூரில் :

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நவராத்திரி நாட்களில் ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் அர்ச்சனைகளும் நிகழ்த்தப் பெற்றன. 24—9—71 அன்று வித்துவான். திரு. கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L. அவர்களும் 25, 26—9—71 ஆகிய நாட்களில் திருநெறிச்செம்மல், நல்லிசைப் புலவர். வித்வான். திரு வி. சா. குருசாமிதேசிகர் அவர்களும், வித்து வான். சிரோமணி வி. சபேசன் அவர்களும் முறையே மீனுக்ஷி யம்மை பிள்ளைத்தமிழ், அபிராமி அம்மை பதிகம் என்ற தலைப்புக் களில் சொற்பொழிவாற்றினர்.

திருப்பனந்தாளில் :

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ் தானத்தில் நவராத்திரி விழாக் குறித்து ஸ்ரீ பிருகந்நாயகி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் சிறப்புற நிகழ்ந்தன. 24—10—71 அன்று நாகப்பட்டினம் திரு. வை. மு. சண்முக தேசிகர் " கண்ணப்பர் " வரலாற்றைக் கதா காலக்ஷேபமாக நிகழ்த்தினுர்கள். 25—9—71 அன்று செஞ்சொற் கொண்டல், வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் M. A. அவர்கள் " அபிராமி அந்தாதி " என்ற தலைப்பிலும், 26—9—71 அன்று வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களும், புலவர். திரு. இரா. செல்வக்கணபதி அவர்களும் முறையே மீனுக்ஷியம்மை குறம், மீனுக்ஷியம்மை பிள்ளைத் தமிழ் என்ற தலைப்புக்களிலும் சிறப்புரையாற்றினர்.

திருபுவனத்தில் :

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ தர்மசம்வர்த்தனி அம்பாளுக்கு நவராத்திரி நாட்களில்

விசேஷ அபிஷேக ஆராதனைகளும், சொற்பொழிவுகளும் நடைபெற்றன. 25—9—71 அன்று புலவர். திரு. B. நடராசன் அவர்கள் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் என்ற தலைப்பில் பேருரையாற்றினர்கள். 26—9—71 அன்று திருநீலகண்டர் வரலாற்றை தஞ்சை, திருமதி. திலகவதி அவர்கள் கதாகாலக்ஷேபமாக நிகழ்த்தினர்கள். 27—9—71 அன்று வித்துவான். சிரோமணி திரு. வி. சபேசன் அவர்கள் மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ் என்ற தலைப்பில் விரிவுரை ஆற்றினர்கள்.

**திருவையாற்றில் :**

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ தர்மசம்வர்த்தனி அம்பாளுக்கு நவராத்திரி விழா நாட்களில் அபிஷேக அலங்கார ஆராதனைகள் சிறப்புற நிகழ்ந்தன 25—9—71 அன்று மாயூரம் புலவர். திரு. சா. முத்துக் கிருட்டினன் அவர்கள் "மீனாக்ஷியம்மை பிள்ளைத் தமிழ்" என்பது பற்றிப் பேருரை நிகழ்த்தினர்கள். 26—9—71 அன்று தருமபுரம் திரு. R. வேலாயுத ஓதுவார் அவர்களால் குங்குலியக்கலையர் வரலாறு இன்னிசைக் கதையாக நிகழ்த்தப்பட்டது. 27—9—71 அன்று மாயூரம் புலவர். திரு. ஆ. இராமபத்திரன் B. A. அவர்கள் அபிராமி அந்தாதி என்பது பற்றி விரிவுரையாற்றினர்கள்.

**திருக்குவளையில் :**

திருக்குவளை ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வண்டமரும் பூங்குழல் அம்பாளுக்கு நவராத்திரியை முன்னிட்டு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. 25—9—71 அன்று திருப்பனந்தாள் வித்துவான். திரு. M. சுந்தரேசம் பிள்ளை அவர்களும், 27—9—71 அன்று தருமபுரம் வித்துவான். திரு. இரா. செல்வக்கணபதி அவர்களும் முறையே, மீனாக்ஷியம்மை பிள்ளைத் தமிழ், அபிராமி அந்தாதி என்ற தலைப்புக்களில் விரிவுரையாற்றினர்கள். ஆங்காங்கும் அன்பர் பலர் வந்து வழிபட்டும் சொற்பொழிவுகளைக் கேட்டும் மகிழ்ந்தனர்.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

## திரு. K. முத்துஜோதிடர்

(விரோதிகிருதுஸு ஐப்பசிமீ 1உ முதல் 30உ முடிய)

(18—10—71 முதல் 16—11—71 முடிய)

நாளது விரோதிகிருது வருஷம் புரட்டாசி மாதம் 31ம் தேதி பானு வாரம், உத்திரத்துக்குமேல் ஹஸ்த நக்ஷத்திரமும் கிருஷ்ண சதுர்தசியும் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 46-55க்கு கடக லக்னத்தில் லோகரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் துலாஸங்கிரமணம் செய்கிறார். மேற்படி ஸங்கிரமணபலமானது ஸமஸ்த மங்களத்தையும் எல்லோருக்கும் உண்டுபண்ணும்".

### 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். ஜீவனம் ஓங்கும். ஆரோக்யக் குறைவு காட்டும். அடிக்கடி ஸஞ்சாரம் ஏற்படும். வரவு செலவு சமமாக இருக்கும். புதிதாக பிரபுக்கள் தெரிசனம் ஏற்படும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

### 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

விருஷப ராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனைத் தரும். புதிதாக ஜீவனம் ஏற்பட்டு, விசேஷ லாபம் ஏற்படும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். மேலோர்களின் வரவும் பூர்ணமாக தெய்வ சக்தியும் ஏற்படும். செவ்வாய் புதன் சுபமாகும்.

### 3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பத்தில் சுபமான காரியங்களும் புண்ணிய க்ஷேத்திர தெரிசனங்களும் மேலோர் பேரியோர் சேர்க்கையும் ஜீவன விருத்தியும் உண்டாகும். நண்பர் ஒருவரால் விசேஷமான நன்மை உண்டாகும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். ஸ்தல காரியங்களும் தவக்கத்துடன் நடந்து நன்மையைத்தரும். வீணான அலைச்சல்களும் காரியங்களில் இடையூறுகளும் இருந்து கொண்டே இருக்கும். பெரிய குடும்பஸ்தர்களுக்குப் பலவிதமான மாறுதல்களும் கவலைகளும் ஏற்படும்; எல்லாம் தெய்வபலத்தால் நன்மையாகவே முடியும். சனி ஞாயிறு சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் $\frac{1}{4}$.

சிம்ம ராசி 9 பாதங்களும் சுபமான பலன்களைத் தரும். ஜீவனம் விருத்தியாகும். கீர்த்திஉண்டாகும். நஷ்டமானபொருள் கள் தானாக வந்துசேரும். புதிதான வியாபாரிகளுக்கு எதிர் பாராத லாபம் ஏற்படும். உலக பிரசித்தி ஏற்படும். வியவஹாரம் ஜெயிக்கும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$.

கன்னியா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். வெளி இடங்களில் ஸஞ்சாரமும் வசித்தலும் இருந்து கொண்டு இருக் கும். ஆரோக்யம்தரும். புதிதாக ஆரம்பிக்கும் காரியங்கள் எல் லாம் சுலபமாக ஸாதிக்க முடியும். உலக பிரஸித்தியும் தெய்வ சக்தியும் அதிகமாகும். புதன் வியாழன் சுபமாகும்.

7, துலாம் – சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$

துலா ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். வரவு செலவு சமமாக இருந்து கொண்டு இருக்கும். ஜீவனம் ஓங்கும். புதிதாக பிரபுக்கள் தெரிசனமும் விசேஷமான யக்ஞ யாக பலன் களும் கிடைக்கும். ஆரோக்யம் தரும். தெய்வ சக்தி முன்னின்று காக்கும். வெள்ளி சனி சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை.

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும் குடும்பத் தொல்லைகளாலும் ஜீவன விஷயமாயும் அடிக்கடி மாறுதல்கள் ஏற்படும். செலவினங்கள் அதிகமாகும். எல்லாக் காரியங்களும் தாமதமாகத்தான் நடக்கும் புதிதான நண்பர் ஒருவரால் விசேஷமான நன்மைகள் ஏற்படும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼.**

தனுர் ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். ஜீவனவிருத்தி ஏற்படும். மேலோர் பெரியோர்களின் அன்பு உண்டுபண்ணும். சுகமான இடத்தில் சுகமான வாசமும் ஸ்திரமான ஜீவனமும் ஏற்பட்டு சுபம் உண்டாகும். செவ்வாய் புதன் சுபமாகும்.

**10. மகரம்– உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½**

மகர ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். ஜீவனம் ஓங்கும். ஆரோக்யம் உண்டுபண்ணும். இல்லறசுகம் அதிகமாகும் அடிக்கடி சுபமான விரயங்கள் ஏற்பட்டுக்கொண்டு இருக்கும். வம்ச விருத்தி ஏற்படும். படிப்பு அதிகமாகும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

**11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾,**

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். உழைப்பு அதிகமாகும். அநேக நண்பர்களால் உபகாரமும் கீர்த்தியும் ஏற்படும். மனதில் நினைத்த காரியம் நடக்கும். புண்ணிய ஸ்தல தரிசனங்கள் ஏற்படும். தெய்வ பக்தியால் எல்லாக் காரியங்களும் சுபமாக நடக்கும். சனி ஞாயிறு சுபமாகும்.

**12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.**

மீன ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். ஜீவன விருத்தி உண்டாகும். வித்யை விருத்தியாகும். குடும்பம் ஓங்கும் புதிதான தொழில் முறைகளால் விசேஷமான லாபமும் கீர்த்தியும் உண்டுபண்ணும். ஆரோக்யம் உண்டுபண்ணும். தெய்வ சக்தியால் எல்லாம் சுபமாகவே நடக்கும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

குறிப்பு :- நாளது அர்ப்பசி மாதத்தில் சூரிய ஸங்கிரமணம் இரவாய் ஏற்பட்டாலும் கிரஹ ஸஞ்சார நிலைகள் உலகக்ஷேமத்துக்குப் பாதிக்கக் கூடியதாக அமைந்திருப்பதால் அதற்குப் பூர்வாங்கமாக ஏற்படவேண்டிய அபசகுனங்கள் திவ்யபௌம உத்பாதங்கள் இயற்கைக்கோளாறுகள் சுபிக்ஷக்குறைகள் எல்லாம் எச்சரிக்கை தரும். ஒருவரும் பரீக்ஷை பார்க்கவேண்டாம். முன் மாத ஸஞ்சிகைகளில் எழுதி வருகிறபடி கடவுளை நம்பி நமது கடமைகளை விடாமல் செய்துகொண்டுவர கருணாநிதியான ஸ்ரீ ஸர்வேசுவரன் காப்பார்.

தருமையாதீனம் வேளூர் தேவஸ்தானம்
இலவச சித்த வைத்திய சாலை

# மூத்திரேந்திரிய ரோகங்கள்
## ( Diseases of the Urinary Organs )

டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

( மலர் 30. இதழ் 10. பக்கம் 584 இன் தொடர்ச்சி )

### நீர்க்கட்டு அறிகுறிகள் :

பெரினியம் என்னும் பாகத்தில் புரை; ரணம், (Ulser) ஏற்பட்டு நொந்து, வீங்கி, கடுத்து, எரிந்து நீர் தாரைக்குச் சென்று நீர் இறங்கும்போல் இருக்கும்; ஆனால் இறங்காது. நீர்ப் பாதை வழியாய்ச் சொட்டு சொட்டாய் நீர் கசிந்து இறங்குகிற ரோகத்திற்கு பகந்திர ரண ரோகம் (Fisrula in Perineo oy Urinary Fistula) என்று பெயர். வியாதி காணும்போது சகிக்கமுடியாத வேதனையும் மயக்கமும் உண்டாகும். ஒவ்வொரு வேளை நீர் மஞ்சள் நிறத்திலும் சில சமயம் ரத்தம்போலும், சுக்கிலம்போலும் இறங்கும்; தொப்புள்பாகம் கனத்து வலிக்கும். வயிறு பொருமும். அபானம் சுருங்கும். ஆகாரம் செல்லாது. நாளுக்குநாள் உடல் மெலிவும் உண்டாகும்.

### சிகிச்சை :

முதலில் மூத்திர தாரையை பூஜி என்னும் மெழுகு திரியை விட்டு தாராளப்படுத்திக்கொண்டு அதன்பின் காடிகாரஜலத்தை அந்தப் புரையில் விட்டுக் கழுவி ரணத்தை ஆற்றலாம்.

நெருஞ்சி முள் வேர் 10 பலம் இடித்து 4 படி ஜலத்தில் விட்டு அதில் ஒருபடியாகச்சுண்டவைத்து நீரைவடித்து அதில் முந்திரி பழமும், பேரீச்சம்பழமும், பொரித்த வெண்காரம், சீந்தில் சர்க்கரை, கோஷ்டம், லவங்கம், அதிமதுரம், ஏலம், செங்கழுநீர் கிழங்கு, ஆடாதோடை வேர், தேற்ருன்விரை, கூகைநீர் இவை வகைக்கு ¼ பலம் வீதம் இடித்து வஸ்திரகாயம்செய்து மேற்படி ஜலத்தில் கலந்து பசுநெய் அரைபடி விட்டு சர்க்கரை 2 பலம் சேர்த்து காய்ச்சி நீர் சுண்டிய பின் லேகிய பதத்தில் எடுத்து வைத்துக்கொண்டு காலை மாலை ஆகாரத்திற்கு முன் 1 டீஸ்பூன் அளவு சாப்பிட்டுவர இந்த ரோகம் அறவே நீங்கும்.

இளநீர் (துவர்ப்பாக உள்ளது) அல்லது புளிப்பில்லாத தென்னங்கள் 4 படி, அதில் நெல்லிவற்றல் 10 பலம்; கடுக்காய் தோல் 2 பலம், தான்றிக்காய் தோல் 2 பலம் இடித்துப் போட்டு 2 படியாகச் சுண்டவைத்து வெல்ல சர்க்கரை ½ கிலோ சேர்த்து இரண்டு நாள் சென்றபின் காலை மாலை இரண்டு அவுன்ஸ் வீதம் சாப்பிட்டுவந்தால் மேற்கண்ட ரோகம் உடனே நிவர்த்தியாகும். (அனுபவமுறை)

சிலாக்கு விடுவதினாலும், அடிபடுவதினாலும், ரத்த நரம்பு அறுபட்டுப் போவதாலும், ரத்தக் கொதிப்பினாலும், மூத்திர தாரையிலிருந்து ரத்தமும் நீரும் வெளிப்படும். ( Haemorrhage from thc Urethra )

**சிகிச்சை :**

மருதொன்றி இலையை நெல்லிக்காய் அளவு அரைத்து காய்ச்சாத பசும்பாலில் கலந்து காலை மாலை 4 தினங்கள் சாப்பிட்டு வந்தால் ரத்தம் போவது உடனே நின்றுவிடும்.

**நீர்ச்சுருக்கு :**

மூத்திரப்பையில் கல்லிருந்தால் ( Stome in the Bladder ) அடிக்கடி நீர்கடுத்து இறங்கும். நீர் இறங்கும்போது கல்லானது தாரைமேல் அடிக்கடி விழுவதால் நீர்த்தாரையில் வருகிற நீர் திடீரென நின்றுவிடும். அப்போது லிங்கத்தில் வேதனை உண்டாகும். அதைஅடக்கும்பொருட்டுகோசத்தோலைப் பிடித்து இழுத்தால் அப்போது மூத்திரத்தில் ரத்தமும் காண்பதுஉண்டு. இதற்கு ஆங்கில வைத்தியத்தில் அறுவை சிகிச்சை செய்து கல்லை வெளிப்படுத்துவார்கள். அல்லது அறுவை சிகிச்சை செய்து நீர், நீர்த்தாரையிலிருந்து இறங்குவதைத் தடுத்து மூத்திரப் பையிலிருந்தே ஒரு குழாயை வைத்து அதன்மூலம் நீர் வெளியாகும்படி செய்து விடுவார்கள். ஆனால் சித்தவைத்தியத்தில் அறுவை சிகிச்சை இல்லாமலேயே மூத்திரப்பையில் உள்ள கல்லைக் கரைத்து விடலாம்.

**சிகிச்சை :**

1 பலம் வெடியுப்பைச் சட்டியில் போட்டு உருக்கி ஒரு படி நீர் விட்டு அரைப்படியாகச் சுண்டவைத்து அதில் கோவை தண்டை இடித்துப்போட்டு நாள் 1 க்கு ¼ படியாக காலை மாலை சாப்பிட ரோகம் தீரும்.

நெருஞ்சிவேர், சிறுபூளைவேர், சிறுகீரைவேர், சீரகம் வகைக்கு 1 பலம் இடித்துப்போட்டு கியாழம் செய்து கொடுக்க லாம். கோவைதண்டை இடித்துச் சார்பிழிந்து அதில் பொரித்த படிகாரம், சுண்ணாம்பு வகைக்கு 1 விராகனிடை பொரித்துப் போட்டுக் கொடுக்க கல்தெறித்து நீர் இறங்கும்.

( தொடரும் )

## நோயாளிகள் குறிப்பு

S. Rajagopalan,
Circle Supervisor,
T. D. C. C. Bank, Trichy.

6—9—1971

எனக்கு 1956-ம் ஆண்டிலிருந்து உடலில் விக்கமாகவும், காலில் அதிக விக்கமாகவும் மேக படைபோல் சதா கருநீர் வடிந்துகொண்டும் ரணமாகிக் கொண்டும் அதிக அரிப்புடன் தொந்திரவு கொடுத்தது. ஆங்கில முறை வைத்தியர் பலரிடம் சிகிச்சை பெற்றதில் அவர்கள் எனது இரத்தத்தைப் பரிசீலனை செய்து பார்த்ததில் V. D. R. L. Positive 4 dils இருப்பதாகக் கண்டார்கள். இது போன்று இருக்கும் காரணத்தினால்தான் எனது உடல்நிலை அடிக்கடி பாதிக்கப்பட்டு ஆறாத ரணமாக இருந்து வருவதாகத்தெரிவித்தார்கள். மேலும்எனக்குக்குழந்தை கள் ஏற்பட்டால் வரும் சந்ததிகள் பாதிக்கப்படக்கூடும் என்றும் தெரிவித்தார்கள். இது போன்று இரு குழந்தைகள் பிறக்கும் போதே இறந்து பிறந்தது. அதன்பின் பலரிடம் சித்தவைத்திய மும் செய்து பார்த்தேன். அதிலும் பூரணமாகக் குணம் ஏற்பட வில்லை. 1971-ம் வருட ஆரம்பத்தில் தருமபுரம் ஆதீன வேலூர் தேவஸ்தானம் வைத்தீஸ்வரன்கோவில் சித்த மருத்துவ விடுதி யில், மருத்துவர் ராமகிருஷ்ணன் அவர்களிடம் நானும் எனது மனைவியும் தொடர்ந்து சிகிச்சை பெற்றுக்கொண்டதில் என்னு டைய இரத்தம் V. D. R. L. Weak Positive ஆகவும், இரத்தம் சுத்தமாகவும் உள்ளதாக இரத்த பரிசோதனை மூலம் தெரிய வந்தது. சிகிச்சைக்குப் பின், மனைவிக்கு சுகப்பிரசவம் ஆகி குழந்தையும் ஆரோக்கியமாகவும் உள்ளது. தற்போது எனக் கும் உடல்நிலை நல்ல ஆரோக்கியமாக உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(S-d.) S. Rajagopalan.

# அமைதிக்குப் பிரார்த்தனை

நமது பாரத தேசம் எப்பொழுதும் அமைதி விரும்பும் நாடு. நாமும் போருக்குப் போவதில்லை; பிறர், சண்டைக்கு வலுவில் வந்தாலும் அதனைத் தடுத்து நிறுத்தி சமாதான முறையில் பேச்சு வார்த்தைகளின் மூலம் உலகில் அமைதியை நிலை நாட்ட இயலும் என்பதில் அழுத்தமான நம்பிக்கை உடையவர்கள் நாம். நமது நாட்டில் அமைதி நிலவவேண்டும், நமது அண்டை அயலாரும் அமைதியோடு வாழ்தல் வேண்டும் என்பதற்காக நமது நாட்டிலும் உலக அரங்கிலும் அரும்பாடுபட்டு வருகிறது நம்நாடு.

சமயச் சார்பற்ற நாடு என்ற பெருமை விளங்க இங்குள்ள எல்லாச் சமயத்தைச் சார்ந்தவர்களும் ஓரே சம உரிமை பெற்றவர்களாகச் சகோதர உணர்வோடு எந்த வேற்றுமையும் இன்றி வாழவேண்டுமென்பதில் நமது அரசியலாரும் பிற தலைவர்களும் பாடுபட்டுக் காத்து வருகிறார்கள். ஏதாவது ஒரு காரணத்தை முன்வைத்து எங்காவது சாதி சமயப்பூசல்கள் நிகழ்ந்தாலும் அங்கெல்லாம் எல்லா இனத்தவரையும் சேர்த்து வைத்து அமைதி கொள்ளும்படி செய்து வருகிறது. இதேபோல உலகிலும் எல்லா நாட்டிலும் எல்லா மக்களும் சமயச் சுதந்திரம், வாழ்க்கைச் சுதந்திரம் பெற்று உலக மக்கள் அனைவரும் ஓரே குடும்பமாக அமைதியாக வாழ்தல் வேண்டுமென்று விரும்புகிறது. அதற்காகப் பாடுபட்டும் வருகிறது நம்நாடு.

ஆனால், நமது அண்டை நாடான பாகிஸ்தானில் இப்போது மக்களுக்குச் சீரழிவு ஏற்பட்டு பல லட்சக்கணக்கான மக்கள் நம் பாரதத்தில் அடைக்கலம் புகுந்துள்ளனர். மேலும் நமது எல்லையோரங்களில் போர் ஆயத்தங்களும் ஏற்பட்டு வருவதாகத் தெரிகிறது. நமது நாடு, வளர்ந்து வளம்பெற்றுள்ள மற்றைய நாடுகளில் உள்ளதைப்போல வளர்ந்து நமது மக்களும் முன்னணியில் இருக்கவேண்டுமென்பதற்காகப் பலபல திட்டங்கள் போட்டு அவற்றை நிறைவேற்றி வருகிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இந்த நேரத்தில் போர்க் குமுறல்கள் ஏற்பட்டிருப்பது வளர்ச்சிக்கான நமது திட்டங்களைப் பாதிப்பதோடு பல துன்பங்களையும் உண்டுபண்ணும் என்று நமது பாரதப் பிரதமரும் மக்களும் அச்சம் கொண்டுள்ளனர். அதனைத் தவிர்க்கப் பெரும் முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

மக்களுக்குப் பெரும் துன்பங்கள் வந்தால் அவற்றைத் தவிர்த்துக்கொள்ளவும் அது நீங்கி நன்மை பெறவும் மனித முயற்சிகள் எவ்வளவு திறம்பெற்றிருந்தாலும் சிறந்திருந்தாலும் தெய்வத்தின் துணையும் அமைதல் வேண்டும். இடையூறு

எவ்வளவு பெரிதாக இருந்தாலும், தீய சத்திகள் எத்தகைய வலுவுடையனவாக இருந்தாலும் அவற்றை நீக்கிக் கொள்வதற்கு நாம் எல்லோரும் ஒரு சேர உறுதியாக அலைவில்லாத ஒற்றுமையுடன் கடவுளைப் பிரார்த்தித்தால் அத்துன்பம் நீங்கிச் சுகம் பெறலாம் என்பதை நம்மோடு வாழ்ந்து நமது நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த காந்தியடிகளும் மெய்ப்பித்திருக்கிறார்கள். அஹிம்சாவழியில் நமது பெரியோர்களும் நமக்கு வழிகாட்டி இருக்கிறார்கள். எல்லாப் பெரும் நூல்களும் இதனையே அறிவுறுத்துகின்றன. ஆகவே இன்றியமையாது இப்போது செய்யத்தக்கதும் செய்யவேண்டியதும் ஒருமுகப்பட்ட தெய்வப் பிரார்த்தனையும் தெய்வ வழிபாடும் தான். இக்கலியில் இது போன்ற துன்பங்களைப் போக்கி மக்களுக்கு அவர்கள் வேண்டும் நலமனைத்தும் அளித்துக் காப்பவள் துர்க்காதேவி என்றும் நமது நூல்கள் உறுதிகூறுகின்றன. அதனை நாமும் மேற்கொண்டு போர் மேகம் விலகவும் நமது நல்ல பல திட்டங்களும் வெற்றியுடன் நிறைவேறவும் பிரார்த்தித்து அந்தத் துர்க்கைத் தாயை வேண்டுவோமாக. அதற்குரிய ஜப மந்திரமும் கீழே தரப்பட்டிருக்கிறது. இப்பிரார்த்தனையை இன்றே தொடங்குவோமாக.

மந்திரம்

शरणागतदीनार्त परित्राण परायणे ।
सर्वस्यार्तिहरे देवि नारायणि नमोऽस्तु ते ॥

சரணாகத தீனார்த்த பரித்ராண பராயணே |
ஸர்வஸ்யார்த்திஹரே தேவி நாராயணி நமோஸ்து தே ||


தன்னைச் சரணமடைந்த எளியவர்களையும் துன்பமடைந்தவர்களையும் காப்பதில் ஈடுபட்டவளே! எல்லோருடைய துன்பங்களையும் போக்குகின்ற பிரகாச ரூபியான நாராயணியே! உனக்கு நமஸ்காரம்.

सर्वस्वरूपे सर्वेशि सर्वशक्ति समन्विते ।
भयेभ्यस्त्राहि नो देवि दुर्गे देवि नमोऽस्तु ते ॥

ஸர்வஸ்வரூபே ஸர்வேசி ஸர்வசக்திஸமன்விதே |
பயேப்யஸ்த்ராஹி நோ தேவி துர்க்கே தேவி நமோஸ்துதே ||

எல்லா ரூபமாயும் இருப்பவளே! எல்லோருக்கும் தலைவியே! எல்லாவித சக்திகளுடன் கூடிய ஹே துர்க்காதேவியே! எங்களைப் பயத்தினின்றும் காப்பாற்றுவாயாக. உனக்கு நமஸ்காரம். எங்கும் அமைதி நிலவுமாக. எல்லா மக்களும் நலம் பெற்று மேலோங்கி வாழ்வார்களாக. வாழ்க உலகெலாம்.

சிவசயிலம் ஸ்ரீ சயிலப்பநாதர் திருக்கோயிலில்



தருமையாதீனத்தில் செய்யப்பெறும்
இராஜகோபுரத் திருப்பணி

சிவசயிலத்தில்



தருமையாதீனம் 16 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் குருமூர்த்தம்